1111

APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE, MADRAS

(*Vide page 146 of the consolidated list published in the Gazette dated 2-6-'36*).

பாலர் தமிழ் வாசகம்

நான்காம் புத்தகம்

2-MAR 1937

1156

பாலர் தமிழ் வாசகம்

நான்காம் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2-MAR 1937
MADRAS

பதிப்பாசிரியர் :

திருவாளர் அ. கந்தசாமிப் பிள்ளை,

தமிழ் விரிவுரையாளர்,

துரைத்தன மகமதியர் காலேஜ், சென்னை.

1203

494 81186

(துரைத்தனத்தார் அங்கீகரித்தது)

(*Vide page 146 in the consolidated list published in the Gazette dated 2—6—1936.*)

V. S. வெங்கடராமன் கம்பெனி,

பப்ளிஷர்ஸ் : : கும்பகோணம்.

பதிப்புரிமை] [விலை அணா 5

Re-printed 1936.

PRINTED AT
THE ROYAL PRINTING WORKS
MOUNT ROAD : : MADRAS

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2-MAR 1937

PUBLISHERS' NOTE

This series of Balar Tamil Readers embody a new method in which nursery rhymes, nursery stories and cradle songs are made the main vehicle for reading, writing and conversation which are the three-fold aim of the study of the mother tongue in the lower classes. In following this psychological and active method, children's experiences at home, in school and in their immediate neighbourhood are the principal topics dealt with in the Readers of this series, and the vocabulary also is so selected that the words used are already familiar to the children, with the result that difficult words which are not within the ken of little boys and girls, which require elaborate explanation and which in consequence retard progress and fluency in reading are avoided with special care. Thus reading and writing are made easy and pleasant, and greater progress is made possible in each class. Another feature of these readers is that more of children's stories, dialogues and conversations are introduced which the pupils can act, and so develop a correct speech-feeling.

So far as the teaching of the mother tongue is concerned elementary education up to Standard V may be said to comprise of three distinct stages. In Standard I the children are to be helped to identify the letters of the alphabet which are familiarised through pictures, simple words and short sentences. In Standards II and III which mark the second or the transition stage, the main aim is to help the pupils to surmount the mechanical difficulties in reading, writing and conversing so as to gain fluency. To facilitate this purpose, it is a sound principle that words of high frequency alone should first be introduced, and this is well kept in view in

these readers. To read as well as to write easy letters of communication is also one of the aims at this stage, and so practice in letter-writing is given copiously in this series.

When the pupils come to the third stage which covers Standards IV and V, they have attained a certain amount of fluency and mastery in reading and writing and they have now a wider outlook as their mental powers have developed further. Hence in these higher classes, the lessons and the vocabulary can go beyond the pupils' immediate experience. It is, therefore, possible at this stage to include topics extending beyond their home-lands to national and inter-national interests. Thus, Readers IV and V in this series are prepared so as to pave the way for creating a reading habit in the pupils so that when they grow up, they may read a vernacular daily, follow world events, and exercise their franchise properly which is defined by the Hartog Committee as the main purpose of elementary education.

This series of Tamil Readers thus stand for certain new principles and methods. It is hoped that these merits will commend themselves to the Headmasters and Managers of schools, and that these books will be widely introduced in their institutions.

We take this opportunity of tendering our sincrre thanks to M. R. Ry. A. Kandaswami Pillai Avl., Lecturer in Tamil, Govt. Muhammadan College, Madras, for the great help he has rendered us in bringing out this series of Readers, and for being their editor.

V. S. VENKATARAMAN & CO.,

PUBLISHERS, KUMBAKONAM.

பொருளடக்கம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2-MAR 1937
MADRAS

பாடம்	விஷயம்	பக்கம்
1.	தமிழ் நாடு	1
2.	செந்தமிழ் நாடு (பாட்டு)	4
3.	மயில்	5
4.	வானம் விழுந்த கதை	9
5.	எங்கள் சிறு தோட்டம்	13
6.	இராஜ ராஜச் சோழர்	17
7.	வான வில்	20
8.	வானவில் (பாட்டு)	23
9.	எலியும் பூனையும்	24
10.	பந்தய விளையாட்டுக்கள்	28
11.	கடிதம்—I	33
12.	மரியாதை முறைகள்	34
13.	லாபத்தில் பாதி	38
14.	இந்தியச் சிறுவர்கள்	42
15.	புகழேந்திப் புலவர்	47
16.	நெல்	51
17.	உயிர்களிடத்து அன்பே உயர்ந்த தவம் (பாட்டு)	56

பாடம்	விஷயம்	பக்கம்
18.	தொட்டதெல்லாம் பொன் ...	... 58
19.	பஞ்சாயத்துச் சபை ...	... 63
20.	கிராமபோன் ...	... 67
21.	மௌன வாசிப்பு ...	... 71
22.	டிக் என்னும் சிறுவனும் அவனது பூனையும்	... 72
23.	உலோகங்கள் ...	... 78
24.	கடிதம்—II	 83
25.	பேராசை பெரு நஷ்டம் ...	... 85
	வெற்றி வேற்கை ...	 94
	தனிப் பாடல்கள் ...	... 97



இராஜ ராஜச் சோழர் தஞ்சைக் கோயில் சிற்பங்களைப் பார்வையிடுதல். (பக்கம் 17)

பாலர் தமிழ் வாசகம்

நான்காம் புத்தகம்

1. தமிழ் நாடு

நாம் பிறந்தது முதல் பேசி வருவது தமிழ்ப் பாஷை. பாஷையை மொழி என்றும் சொல்லலாம். தமிழ் நமக்குத் தாய் மொழி. அது சீரும் சிறப்பும் பெற்ற ஒரு இனிமையான மொழி. தாய் மொழியில் திருத்தமாகப் பேசவும் எழுதவும் பழகத்தான் நீங்கள் இந்தப் பாலர் தமிழ் வாசகம் படிக்கிறீர்கள். தமிழில் அநேக அரிய பெரிய புத்தகங்கள் இருக்கின்றன. பாலர்களே! நீங்கள் பெரியவர்கள் ஆனதும் அவைகளைப் படித்தால் நல்ல அறிவை அடைவீர்கள்.

தமிழ் நமது தாய் மொழியாகையால் நாம் தமிழர்கள் ஆவோம். தமிழ் மக்கள் நல்ல ஒழுக்கம், கல்வி, நாகரிகம் முதலிய மேலான குணங்கள் படைத்தவர்கள். ஜாதி, மதம், தொழில் இவைகளில் தமிழர்கள் பலவகைப் பட்டிருந்தாலும் அவர்கள் அனைவரும் சகோதரர்களே. ஆதலால் தமிழ் மக்களாகிய நாம்

அன்புடனும், ஒற்றுமையுடனும் வாழ வேண்டும்.

பல ஊர்கள் அடங்கிய விசாலமான இடம் நாடு எனப்படும். தமிழர் வசிக்கும் நாடு, தமிழ் நாடு. தமிழ் நாட்டைத் தமிழகம் என்றும் சொல்லுவார்கள். அது தெற்கில் கன்னியாகுமரி முதல் வடக்கில் திருப்பதி மலை வரையிலும் பரவியுள்ள ஒரு பெரிய தேசம்.

தமிழ் நாடு நிலவளம், நீர்வளம் முதலிய பல வளங்கள் பொருந்தியது. ஓங்கி வளர்ந்த காடுகளும், உன்னதமான மலைகளும் இதில் பல உள்ளன. பெண்ணையாறு, பாலாறு, காவிரி, வைகை, தாம்பிரபரணி முதலிய நதிகள் இந்நாட்டில் பாய்கின்றன. புன்செய்த் தானியங்களும், நன்செய்த் தானியங்களும் ஏராளமாக இங்கு விளைகின்றன. தென்னை, கமுகு, கரும்பு, வாழை முதலியனவும் இந்நாட்டில் உற்பத்தியாகின்றன.

பண்டைக்காலத்தில் தமிழகம் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவைகளைச் சேரர், சோழர், பாண்டியர் என்னும் தமிழ் அரசர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்களுக்குத் தமிழ் நாட்டு மூவேந்தர் என்று பெயர். அக்காலத்தில் அவர்கள் அமைத்த

அரண் பொருந்திய நகரங்களும், அழகிற் சிறந்த கோயில்களும் இப்பொழுதும் உள்ளன.

நமது தாய் நாடாகிய தமிழ்நாடு செழிக்க நாம் ஒவ்வொருவரும் பாடுபடுவோமாக!

சொல் விளக்கம் :—மக்கள்=ஜனங்கள். படைத்தவர்கள்=உடையவர்கள். அனைவரும்=எல்லோரும். உன்னதமான=உயரமான. கமுகு = பாக்கு மரம். புன்செய்= புழுதியில் பயிரிடப்படும் நிலம். நன்செய் = சேற்றில் பயிரிடப்படும் நிலம். பண்டைக்காலத்தில்=முன் காலத்தில். தமிழகம்=தமிழ்நாடு. பாண்டிய நாடு=மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்கள். சோழ நாடு=தஞ்சை, திருச்சி ஜில்லாக்கள். சேர நாடு=சேலம், கோயம்புத்தூர். மலையாளம் ஜில்லாக்கள். அரண்=கோட்டை. நகரம்= பட்டணம்.

கேள்விகள் :—

1. தமிழ் மொழியைக் கற்பதின் நோக்கங்கள் என்ன?
2. தமிழ் நாட்டில் பாயும் நதிகள் யாவை?
3. தமிழ் நாட்டின் எல்லைகள் யாவை?
4. பண்டைக்காலத்தில் தமிழகம் எவ்வெந்த நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது?
5. தமிழ் நாட்டு மூவேந்தர் யார், யார்?
6. நாட்டுக்குச் செய்யவேண்டிய நமது கடமை யாது?

———

2. செந்தமிழ் நாடு (பாட்டு)

1. செந்தமிழ் நாடெனும் போதினிலே-இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே. (செந்தமிழ்)

2. வேதம் நிறைந்த தமிழ்நாடு—உயர்
வீரஞ் செறிந்த தமிழ்நாடு—நல்ல
காதல் புரியும் அரம்பையர் போல்இளங்
கன்னியர் சூழ்ந்த தமிழ்நாடு. (செந்தமிழ்)

3. காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருநை நதி—யென
மேவிய ஆறுபல வோடத்—திரு
மேனி செழித்த திருநாடு. (செந்தமிழ்)

4. நீலத்திரைக்கடல் ஓரத்திலே—நின்று
நித்தம் தவம்செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக்கிடக்கும் தமிழ்நாடு. (செந்தமிழ்)

5. கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு. (செந்தமிழ்)

சொல் விளக்கம் :—செறிந்த=மிகுந்த. அரம்பையர்= தேவலோகப் பெண்கள். கன்னியர்=இளம்பெண்கள். பொருநை = தாம்பிரபரணி. திரை = அலை. குமரி= கன்னியா குமரி. மாலவன்=விஷ்ணு. குன்றம்=மலை. மாலவன்குன்றம்=திருப்பதி மலை. மண்டி =மிகுந்து. பார்=பூமி.



3. மயில்

பறவை இனத்தில் மிகவும் அழகானது மயில். கோயில்களிலும், பிரபுக்களின் மாளிகைகளிலும் மயில்கள் வளர்க்கப்படுவதை நாம் பார்க்கிறோம். அவைகள் சாதாரணமாகக் காடுகளில்தான் வசிக்கும். குளிர் மிகுந்த நாடுகளில் அவைகள் காணப்படுவதில்லை. வேடர்கள் மயில்களைத் தந்திரமாகப் பிடித்துக்கொண்டு வந்து, நாட்டுப்புறங்களில் விற்பார்கள். மயில் கோழி இனத்தைச் சேர்ந்தது.

படத்தில், தனது வாலின் இறகுகளை விரித்துக்கொண்டு நிற்பது ஆண் மயில். வாலிலுள்ள இறகைத் தோகை என்பார்கள்.

இதன் இறகுகள் ஒவ்வொன்றிலும் பச்சை, மஞ்சள், நீலம் ஆகிய வர்ணங்களையுடைய பளபளப்பான புள்ளிகள் அழகாகக் காணப் படுகின்றன. கண்களைப்போல் இருப்பதால், இவைகள் மயிலிறகின் கண்கள் எனப்படும். ஆகாயத்தில் கறுத்த மேகங்கள் உலாவும் பொழுது அவைகளைக் கண்டு, களிப்போடு ஆண் மயில் தனது தோகையை உயர்த்தி, விசிறிபோல் விரித்துக்கொண்டு ஒய்யாரமாக ஆடும். மயிலின் நடனம் நமது மனத்தைக் கவர்ந்து பெருமகிழ்ச்சியை உண்டுபண்ணும்.

ஆடும்பொழுதில் அன்றி மற்றக் காலங்களில் மயில் தனது தோகையைச் சுருக்கி வைத்துக்கொண்டே இருக்கும். தோகையின் இறகுகள் உதிர்ந்தால், நாளடைவில் புதிய இறகுகள் முளைத்து வளரும். மயிலுக்குச் சிறகுகள் இருந்தாலும், அதிக உயரம் பறப்பதற்கு அவை உதவுவதில்லை.

மயிலுக்குக் கழுத்து நீளம். அதிலுள்ள பஞ்சுபோன்ற இறகுகள் பல வர்ணங்களுடன் பிரகாசிக்கின்றன. அதன் தலை சிறியது. தலையின் உச்சியில் அழகிய கொண்டை ஒன்று இருப்பதைப் பாருங்கள்! மயிலின் அலகு நீண்டு உறுதியாய் இருக்கும். மயிலுக்குக் கால்கள் உயரமானவை. ஒவ்வொரு காலிலும் முன்

புறத்தில் மூன்றும், பின்புறத்தில் ஒன்றும் ஆக நான்கு விரல்கள் இருக்கின்றன. இவ்விரல்களுக்கு மேல், கோழிக்கு இருப்பதுபோலப் பின் புறமாக முள் போன்ற சிறு விரல் ஒன்று இருக்கிறது. இதன் உதவியால், தன்னோடு சண்டையிட வரும் பட்சிகளையும், மிருகங்களையும் மயில் குத்தித் துரத்தி, தன்னைக் காத்துக் கொள்ளும்.

மயில் உரத்த குரலுடன் கத்தும் சத்தத்திற்கு அகவுதல் என்று பெயர். அக் குரல் கேட்பதற்கு இனிமையாக இராது. அழகான இந்தப் பறவைக்கு வெறுக்கத்தக்க குரல் ஏற்பட்டிருப்பது விந்தையல்லவா?

படத்தில் காணும் மற்றொரு மயில் பெண் மயில். இதற்குத் தோகையில்லை. இது ஆண் மயிலைப்போல் அவ்வளவு பெரியதாகவும், அழகாகவும் இராது. இது வருஷத்தில் ஒரு முறை இரண்டு முட்டைகள் இட்டு, அடைகாத்துக குஞ்சு பொரிக்கும். இக் குஞ்சுகள் முழுவளர்ச்சியடைந்து, பெரிய பட்சிகளாவதற்கு இரண்டு வருஷம் செல்லும்.

மயில் தானியங்களையும், புழு பூச்சிகளையும், இளந் தளிர்களையும் தின்னும். பாம்புகளைக் கண்டால் அது தன் கூரிய அலகினால் கொத்திக்

கொன்றுவிடும். அதனுல் மயில் வசிக்கும் இடங்களில் பாம்புகள் வருவதில்லே.

மயிலின் இறகுகள் அழகிய விசிறிகள் செய்ய உதவும். வைத்தியர்கள் அவற்றை மருந்துக்கு உபயோகிப்பார்கள். மயிலின் கொழுப்பிலிருந்து இறக்கப்படும் மயிலெண்ணெயும் ஒரு வித மருந்துப் பொருளே ஆகும்.

பெண்களின் குரலுக்குக் குயிலேயும், நடைக்கு அன்னத்தையும் ஒப்பாகக் கூறுவது போலவே, அவர்களின் சாயலுக்கு மயிலே ஒப்புக் கூறுவதும் வழக்கம். மயில் மிகுந்த அழகும், கம்பீரமுமுள்ள பட்சியாதலால் மனிதர்கள் இதனே வளர்த்து வருகிருர்கள். இது முருகக் கடவுளின் வாகனமாகவும் கருதப்படுகிறது.

சொல் விளக்கம் :—ஒய்யாரமாக = அலங்காரமாக. அன்னம் = ஒருவிதப் பறவை. சாயல் = தோற்றம். குத்து, கொத்து — வித்தியாசத்தைக் கவனிக்கவும்.

கேள்விகள்:—

1. மயில் எந்த இனத்தைச் சேர்ந்தது ?
2. மயிலின் தோகையில் எவ்விதப் புள்ளிகள் உள ?
3. மயில் எப்பொழுது தோகையை விரித்தாடும்?
4. ஆண் மயிலுக்கும் பெண் மயிலுக்கும் தோற்றத்திலுள்ள வித்தியாசம் என்ன ?
5. மயிலின் குரல் எவ்விதம் இருக்கும் ?

4. வானம் விழுந்த கதை



முன்னொரு காலத்தில் கோழிக்குஞ்சு ஒன்று இரை தேடக் காட்டிற்குப் போய்க்கொண்டிருந்தது. அப்பொழுது வழியிலிருந்த ஓர் ஆல மரத்திலிருந்து ஆலம் பழம் ஒன்று அதன் தலையில் விழுந்தது. அதனை அச் சிறு கோழிக்குஞ்சு, வானமே தன் தலையில் விழுந்து விட்டதென்று நினைத்து நடு நடுங்கிற்று. உடனே அது "ஐயையோ! வானமே என் தலையில் விழுந்துவிட்டதே! என்ன செய்வேன்? இதை அரசனிடம் போய் முறையிடுவேன்" என்று கத்திக்கொண்டு சென்றது.

வழியில் ஒரு பெட்டைக்கோழி எதிரில் வந்தது. கோழிக்குஞ்சு அதைப் பார்த்து, "கோழியே, கோழியே எங்கே போகிறாய்?" என்று கேட்டது. பெட்டைக்கோழி, "நான் இரைதேடக் காட்டிற்குப் போகிறேன்" என்று பதிலளித்தது. அதற்குக் கோழிக்குஞ்சு, "போகாதே, போகாதே. நான் காட்டிற்குப் போனேன். வானமே என் தலைமேல் விழுந்தது.

இதை அரசனிடம் சொல்லப் போகிறேன். நீயும் என்னோடு வருகிருயா ?" என்றது. பெட்டைக்கோழி, "நானும் வருகிறேன்" என்று அதனுடன் சென்றது.

இவைகள் இரண்டும் செல்லும் வழியில் சேவற்கோழி ஒன்று எதிரில் வந்தது. அதைப் பார்த்துப் பெட்டைக்கோழி, "சேவற்கோழி, சேவற்கோழி, எங்கே போகிருய் ?" என்று



கேட்டது. "நான் இரைதேடக் காட்டிற்குப் போகிறேன்" என்று அது பதில் உரைத்தது. அதற்குப் பெட்டைக்கோழி, "போகாதே, போகாதே. இந்தக் கோழிக்குஞ்சு காட்டிற்குப் போயிற்றும். அங்கே வானம் இடிந்து இதன் தலைமேல் விழுந்ததாம். நாங்கள் இதை அரசனிடம் சொல்லப் போகிருேம். நீயும் எங்களுடன் வருகிருயா ?" என்று வினவியது. சேவற்கோழி, "நானும் வருகிறேன்" என்று அவைகளோடு சென்றது.

இவைகளின் எதிரே ஒரு குள்ளவாத்து



வர, சேவல் அதைப் பார்த்து, " வாத்தே, வாத்தே, எங்கே போகிறாய் ?" என்று வினவியது. " நான் இரைதேடக் காட்டிற்குப் போகிறேன் " என்று அது சொல்ல, அதற்குச் சேவற் கோழி, " போகாதே, போகாதே. இந்தக் கோழிக்குஞ்சு காட்டிற்குப் போனபோது வானம் இடிந்து அதன் தலைமேல் விழுந்த தாம். நாங்கள் இதை அரசனிடம் சொல்லப் போகிறோம். நீயும் எங்களுடன் வருகிறாயா ?' என்றது. குள்ளவாத்து. ' நானும் வருகிறேன்" என்று சொல்லி அவைகளோடு சேர்ந்து சென்றது.

செல்லும் வழியில் ஒரு குள்ளநரி எதிரே வந்து, இப் பறவைகளைப் பார்த்து, " நண்பர்களே ! நீங்கள் எங்கே போகிறீர்கள் ?" என்று கேட்டது. அதற்குக் குள்ளவாத்து, " இந்தக் கோழிக்குஞ்சு காட்டிற்குப்போனபோது வானம் இடிந்து இதன் தலைமேல் விழுந்ததனால், நாங்கள் இதை அரசனிடம் சொல்லப் போகிறோம். நீயும் எங்களுடன் வருகிறாயா ?" என்றது. உடனே குள்ளநரி, ' இவைகளை யெல்லாம்

என் வீட்டிற்கு அழைத்துப்போய்க் கொன்று தின்பேன்' என்று தனக்குள் நினைத்துக் கொண்டது.

பின்பு நரி அப் பறவைகளைப் பார்த்து, "உங்களை அரசனிடம் நான் அழைத்துக்கொண்டு போகிறேன்; என்னுடன் வாருங்கள்" என்று கூறிற்று. கோழிக் குஞ்சும், பெட்டைக் கோழியும், சேவற் கோழியும், குள்ள



வாத்தும் நரியோடு ஏகின. குள்ளநரி அவைகளைத் தன் இருப்பிடத்தை நோக்கி அழைத்துக் கொண்டு செல்லுகையில், தூரத்தில் ஒரு பெரிய வேட்டை நாய் வருவதைக் கண்டு, பயந்து, ஊளையிட்டுக்கொண்டு காட்டைப் பார்த்து ஓடிற்று. வாத்து குளத்தைப் பார்த்து ஓடிற்று. சேவற்கோழியும், பெட்டைக்கோழியும், கோழிக் குஞ்சும் வீட்டைப் பார்த்து ஓடத்தொடங்கின.

சொல் பயிற்சி :—பின்வருவனவற்றில் ஆணைக் குறிக்கும் சொல்லையும், அதற்கேற்ற பெண்ணைக் குறிக்கும் சொல்லையும் ஜோடியாக எடுத்து எழுதுக :—

சேவல், பசு, சிறுமி, தாய், அரசி, வேலைக்காரன், அக்காள், சிறுவன், அரசன், பெட்டை, எருது, வேலைக்காரி, தகப்பன், அண்ணன்.



5. எங்கள் சிறு தோட்டம்

எனது சகோதரி கமலமும், நானும் எங்கள் வீட்டின் முன்புறத்தில் புஷ்பத் தோட்டம் ஒன்றும், புறக்கடையில் காய்கறித் தோட்டம் ஒன்றும்வைத்துவளர்த்து வருகிறோம். பாடங்கள் படித்தபிறகு, ஓய்வு நேரங்களில் தோட்ட வேலை செய்வதில் எங்களுக்கு மிக்க ஆர்வமும், ஆவலும் உண்டு. எமது பெற்றோரும் இது விஷயமாக எங்களுக்குத் தேவையான உதவி புரிந்து வருகிறார்கள். சில தருணங்களில் அவர்களும் எங்களுடன் வந்துவேலை செய்வது வழக்கம்.

எங்கள் வீடு வீதிக்குச் சிறிது உள்ளடங்கி யிருப்பதால், வீட்டின் முன் புறத்திலுள்ள காலியான இடத்தைப் பண்படுத்தி, ஒரு புஷ்பத் தோட்டம் அமைத்துள்ளோம். அங்கு ரோஜா, மல்லிகை, செவ்வந்தி, அலரி, பாரிஜாதம், மந்தாரை முதலிய புஷ்பச்செடிகளை வளர்த்து வருகிறோம். மண் தொட்டிகள் சிலவற்றில் 'குரோட்டன்வ்ஸ்' எனப்படும் சீமைச்செடி வகைகளைப் பயிராக்கியும், வீட்டின் தலைவாயிலில் சம்பங்கிக் கொடிகளைப் படரவிட்டும் இருக்கிறோம். தரையைக் கொத்திக் கொடுத்து, களைகள் பிடுங்கி, காலாகாலத்தில் தண்ணீர் பாய்ச்சி, தோட்டத்தைக் கண்ணுங் கருத்துமாகக் கவனித்து வருகிறோம். குப்பை செத்தைகள் சேராமல் தோட்டத்தைச் சுத்தமாக வைத்தும், பார்ப்பதற்கு அழகு தரும்படி செடிகளை வரிசை வரிசையாய்ப் பயிர் செய்தும் வருகிறோம்.

எங்களது பூந்தோட்டம் பார்வைக்கு மிக நேர்த்தியாகவும் அழகாகவும் இருப்பதோடு, வேறு வகைகளிலும் பயன்படுகிறது. இதில் மலரும் புஷ்பங்களை எனது தாயும், சகோதரியும் தலையில் சூட்டிக் கொள்ளவும், மாலையாகத் தொடுத்துப் படங்களை அலங்கரிக்கவும் உபயோகிக்கிறார்கள். இங்குத் தேன் உண்ண வரும் வண்டுகளின் இனிய ஓசை செவிக்கு இன்பம்

விளைவித்து மகிழ்ச்சியைத் தருகிறது. செழுமை யான செடி கொடிகளின் பசுமையும், மலர் களின் பலவித நிறமும் எங்களுக்கு உற்சாகத்தை உண்டாக்குகின்றன. இத்தோட்டத்திலிருந்து வரும் காற்று எங்கள் வீடெங்கும் நறுமணம் கமழும்படி வீசுகின்றது.

எங்கள் வீட்டின் புறக்கடையில் ஒரு கிணறு இருக்கின்றது. அதைச் சுற்றிலுமுள்ள தரையை முதலில் மண் வெட்டியால் கொத்தி, மண் கட்டிகளை உடைத்துச் சமப்படுத்தினோம். பிறகு பாத்திகள் கட்டியும், குழிகள் தோண்டி யும் அவைகளில் வீட்டுக்கு வேண்டிய அரைக் கீரை, வெண்டை, அவரை, கொத்தவரை, பீர்க்கு, பாகல், புடல், மிளகாய் முதலிய காய் கறிச் செடிகளைப் பயிர்செய்து வருகிறோம். வாழை, எலுமிச்சை, கருவேப்பிலை முதலிய சில மரங்களையும் வேலி ஓரத்தில் வளர்த்து வருகிறோம்.

நாங்கள் வளர்த்துவரும் தோட்டங்களில் விளையும் காய்கறிகளும், புஷ்பங்களும், எங் களுக்குப் பலவிதங்களில் உபயோகப்படுகின் றன. குழந்தைச்செடிகள் சிறு விதைகளிலிருந்து முளைத்து வளர்ந்து வருவதை நாங்கள் பார்க் கும்பொழுது, எங்களுக்கு அளவில்லாத ஆனந்தம் உண்டாகிறது. பாடசாலையில்

இயற்கைப் பாடம் சம்பந்தமாகப் படிக்கும் விஷயங்களை நாங்கள் எங்கள் தோட்டத்தில் நேரில் கண்டு அறிகிறோம். தோட்டத்தில் வரும் தவளைகள், பட்சிகள், புழு, பூச்சிகள் முதலிய ஜந்துக்களைப் பற்றியும் கவனித்து அறிகிறோம். எங்கள் சிறு தோட்டம், இவ்விதம் இயற்கைப் பொருள்களைக் கண்டு மகிழவும் சாதகமாயிருக்கிறது.

சொல் விளக்கம்:—புறக்கடை=வீட்டின் பின்புறம். ஆர்வம்=அதிக ஆசை. விளைவித்து=உண்டாக்கி. நறுமணம்=நல்ல வாசனை. கமழும்படி=மணக்கும்படி.

கேள்விகள் :—

1. தோட்டங்கள் இருப்பதால் உள்ள நன்மைகள் யாவை?
2. இப்பாடத்தில் வந்துள்ள புஷ்பங்களின் பெயர்களையும், காய்கறிகளின் பெயர்களையும் எடுத்து எழுதுக.
3. செடிகளைப் பயிர் செய்வதில் கவனிக்கவேண்டிய முறைகள் எவை?
4. புஷ்பங்கள் எவ்வெவ்விதத்திற் பயன்படுகின்றன?
5. பாடசாலைப் படிப்புக்குத் தோட்டங்கள் உதவியாவது எப்படி?
6. இயற்கைப் பொருள்கள் என்பவை எவை?

பயிற்சி :—பின்வரும் சொற்களை உபயோகித்து வாக்கியங்கள் அமைக்க :—

ஓய்வுநேரம், ஆவல், காலாகாலத்தில், கண்ணுங் கருத்துமாக, அலங்காரம், கருவேப்பிலை.

———

6. இராஜ ராஜச் சோழர்

தஞ்சை மா நகரைத் தலை நகராகக் கொண்டு முற்காலத்தில் அரசு புரிந்த சோழ மன்னர் அனைவரிலும் மிகப் புகழ் வாய்ந்தவர் இராஜ ராஜச் சோழர். இவர் கி. பி. 985-ம் வருஷத்தில் முடி சூடி, நீதி தவறாது செங்கோல் செலுத்தி வந்தார். மகா வீரராகிய இவ்வேந்தர்சிங்காதன மேறியதும், குடிவளம் ஓங்கச் செய்து முதலில் தமது இராஜ்ஜியத்தைப் பலப்படுத்திக் கொண்டார்.

தமது ஆட்சியை இன்னும் விசாலப்படுத்தக் கருதிய இவர், தாம் பட்டத்துக்குவந்த பன்னிரண்டாம் ஆண்டில் திக்கு விஜயம் செய்யப் பெரும் படையுடன் புறப்பட்டார். முதலில் மேற்றிசை சென்று சேரனையும், தென்றிசை சென்று பாண்டியனையும் வென்று, வெற்றி யோடும், பெரும் பொருட்குவியலோடும் திரும்பினார். பின்னர், தமது புதல்வன் இராஜேந்திரனை வலிய படையுடன் வடதிசைக்கு அனுப்பி, வட நாட்டு நிருபர்களை வென்றுவரச் செய்தார்.

இவரிடம் பெரிய கப்பற் படை ஒன்றிருந்தது. அக் கப்பற் படையோடு கடலைக் கடந்து இலங்கைத் தீவையும், மலேயா தீபகற்பத்தையும் ஜயித்து, அங்கும் தமது வெற்றிக்கொடியை நாட்டி அவர்கள் திறை செலுத்திய பொன்,

மணி, அணிகலம் முதலிய நிதியுடனும் புகழுடனும் திரும்பினர்.

இவ்வாறு இராஜ ராஜர் பிற நாடுகளை வென்று தமது அரசாட்சியை விஸ்தாரப் படுத்தினது மன்றி, உள் நாட்டில் குடிமக்கள் கலகமின்றிச் சமாதானமாகவும், சந்தோஷமாகவும் வாழுமாறு பலவகை நலங்களையும் அன்புடன் புரிந்துவந்தார். பிரஜைகளிடத்தில் நியாயமான வரி வசூலிக்குமாறு, நிலங்களை அளக்கவும், தரம் பிரிக்கவும் முதன் முதலில் ஏற்பாடு செய்தவர் இம் மன்னர் பிரானே.

தஞ்சை நகரின் திலகமாக விளங்கும் பிரஹதீசுவரர் ஆலயம் இம்மன்னர் கட்டியதே. பிரஹதீசுவரர் என்றால் மிகப் பெரிய கடவுள் என்று பொருள். பெயருக் கேற்றவாறு கடவுளின் உருவமும், கோயிலும் மிகப்பெரியனவாய் அழகாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்குள்ள நந்தி பன்னிரண்டு அடி உயரத்தில் ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்தின் உள்மண்டபத்திற்கு மேலேயுள்ள விமானம் அகன்ற அடித்தளத்தின்மேல் 208 அடி உயர்ந்து நிற்கின்றது. இவ்விமானத்தின் நிழல் தரையில் படுவதில்லை. தென்னிந்தியாவில் உள்ள காட்சிப் பொருள்களில் இந்த நிழல் சாயா விமானம் மிகச் சிறந்தது.

இவ்வாலயத்தின் நித்தியபூஜைக்கும், திருவிழாக்களுக்கும் இவர் அநேக கிராமங்களை மானியமாக விட்டனர். இராஜ ராஜர் வென்ற வெற்றிகளையும், அவர் செய்த தான தருமங்களையும் இக்கோயிற் சுவர்களில் உள்ள கல்வெட்டுக்கள் நன்கு அறிவிக்கும்.

அரசர்க்குரிய அருங்குணங்கள் அனைத்தும் ஒருங்கு வாய்ந்த இராஜ ராஜச் சோழர் நமது தமிழ் நாட்டிற்குச் செய்தஒப்புயர்வற்றபேருதவியாதென்றால், அதுவரை வெளிவராமல் சிதம்பரத்தில் மறைபட்டிருந்த தேவாரங்களை வெளிப்படுத்தினமையே. இதனால் இம்மன்னரது புகழ் உலகமுள்ள அளவும் அழியாமல் நிலைபெறும்.

சொல் விளக்கம்:—அனைவரிலும் = எல்லோரிலும். கி. பி. = கிறிஸ்து பிறந்த பிறகு. திக்கு விஜயம் = பல திசைகளிலும் சென்று வெல்வது. புதல்வன் = மகன். வலிய = பலம் மிகுந்த. தீவு = நான்கு பக்கமும் நீர் சூழ்ந்த தரை. தீபகற்பம் = மூன்று பக்கம் மட்டுமே நீர் சூழ்ந்த தரை. திறை = கப்பம். மணி = இரத்தினம். அணிகலம் = நகை. நிதி = செல்வம். மன்னர், வேந்தர், நிருபர் = அரசர். பிரஜைகள், குடிமக்கள் = குடிகள். பிரான் = தலைவன். திலகம் = பொட்டு. ஒருங்கு = ஒருசேர.

———

7. வானவில்

பாலர்களே! பல நிறங்களுடன் வில் வடிவம் ஒன்று ஆகாயத்தில்தோன்றுவதை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? அதற்கு வானவில் என்று பெயர். அது எவ்வளவு அழகாகக் காண்கிறது! சில தருணங்களில்காலைவேளையில் மேற்கிலும், மாலை வேளையில் கிழக்கிலும் சூரியனுக்கு எதிராக வானவில் மேகங்களில் தெரியும். அது இவ்வாறு தோன்றுவது மழை பெய்வதற்கு ஓர் அறிகுறியாகும் நடுப்பகலிலாவது, இரவிலாவது வானவில் காணப்படுவதில்லை.

வானவில்லின் தோற்றம் மிகவும் அதிசயிக்கத் தக்கதே! இதில் காணும் நிறங்களைக் கவ

னியுங்கள். அதில் ஊதா, நீலி (கரு நீலம்), நீலம், பச்சை, மஞ்சள், கிச்சிலிப்பழ நிறம், சிவப்பு என ஏழு நிறங்கள் காணப்படுகின்றன. கரிய மேகத்தில் தோன்றும் வானவில்லில் இந்த ஏழு நிறங்களும் எவ்வாறு உண்டாகின்றன ?

அதிகாலையில் பசும் புற்களின் நுனியில் தங்கி நிற்கும் பனித் துளிகளை உற்று நோக்கினல், அவைகளில் பல நிறங்கள் தோன்றுவதைக் காணலாம். காலை அல்லது மாலை நேரங்களில், சூரியனுக்கு எதிர் முகமாகத் தண்ணீரை வாரிச் சிதற இறைத்தால், அந்த நீர்த் திவலைகளில் வானவில்லின் வர்ணங்கள் தென்படும். இவற்றைப் போலவே, மேக மண்டலத்திலுள்ள நீர்த் துளிகளில் சூரிய கிரணங்கள் படும்பொழுது, அக்கிரணங்களிலுள்ள ஏழு நிறங்களும் பிரிக்கப்பட்டு, இவ்வாறு வானவில் தோன்றுகிறது. முப் பட்டைக் கண்ணுடித் துண்டின் வழியாக வரும் சூரிய வெளிச்சத்தை ஒரு சுவரில் விழச் செய்து, அதில் ஏழு நிறங்கள் தோன்றுவதை முதன் முதல் கண்டறிந்தவர் ஸர் ஐஸாக் நியூட்டன் என்னும் ஆங்கிலேயரே.

இந்த ஏழு நிறங்களையும் சூரியனுடைய ஏழு குதிரைகள் என்றும், அவைகள் கட்டிய இரதத்தில் கதிரவன் ஊர்ந்து வருகிருனென்

றும் சொல்லுவது நம்மவர் மரபு. வானவில்லை இந்திர தனுசு என்றும் கூறுவர்.

அழகாய்க் காணப்படும் இயற்கைக் காட்சிகளுள் ஒன்றாகிய வானவில்லைப் பார்க்குந்தோறும் நமக்கு அதிக மகிழ்ச்சி விளைகிறதல்லவா?

சொல் விளக்கம்:—திவலை = துளி. மண்டலம் = வட்டம். அரிய = அருமையான. கதிரவன் = சூரியன். மரபு = வழக்கம். இந்திர தனுசு = இந்திரனுடைய வில். விளைகிறது = உண்டாகிறது.

கேள்விகள்:—

1. வானவில் காலையில் எத்திசையில் தெரியும்? மாலையில் எத்திசையில் தெரியும்? எதனால் அவ்வாறு தெரிகிறது?
2. அது நடுப்பகலிலும், இரவிலும் ஏன் காணப்படுவதில்லை?
3. வானவில்லில் காணும் ஏழு நிறங்கள் யாவை?
4. சூரிய வெளிச்சத்தில் ஏழு நிறங்கள் இருப்பதை முதலில் கண்டறிந்தவர் யார்? எவ்வாறு கண்டறிந்தார்?
5. சூரிய வெளிச்சத்தின் ஏழு நிறங்களையும் வானவில்லில் அன்றி, வேறு எவ்வெப் பொருள்களிலும் கண்டறியலாம்?
6. பின்வருவனவற்றின் நிறத்தைச் சொல்லு:—
   புல், வானம், பொன், மல்லிகை, செவ்வந்தி, குங்குமம், காகம்.

8. வானவில் (பாட்டு)

1. வானவில்லைப் பாருங்கள்,
மனத்தில் மகிழ்ச்சி கூருங்கள் !
கானஞ்செழிய மழையைப் பொழியுங்
கார் விளங்கும் போழ்திலே. (வான)

2. வட்டத்தி லொரு பாதிபோல்
வடிவுகொண்டு தோணுதே !
சட்டமாக நிறங்களேழும்
தகுதியாகக் காணுதே. (வான)

3. ஊதா நீலி நீலமும்
ஓங்கும் பச்சை மஞ்சளும்
சாதா கிச்சிலி சிவப்பும் என்று
சாற்றுவாரே பேர்களே. (வான)

4. அந்தி மாலை கிழக்கிலும்
அணிகொள் காலை மேற்கிலும்
வந்துதோன்றும் பெருமை கொண்ட
வானவில்லைக் கவனிப்பீர் ! (வான)

5. கண்ட போதெல்லாம் மனங்
களிப்படைந்து துள்ளுதே !
விண்டலத்தி லிதனைக் கண்டு
வியந்திடாதார் யாவரே ? (வான)

சொல் விளக்கம் :—மகிழ்ச்சி கூருங்கள்=சந்தோஷப் படுங்கள். கானம்=காடு. கார்=மேகம். சட்டமாக= ஒழுங்காக. சாற்றுவார்=சொல்லுவார். அணிகொள்= அழகுள்ள. விண்டலத்தில்=ஆகாயத்தில் (விண்+தலத் தில்). வியந்திடாதார்=ஆச்சரியப்படாதவர்.

9. எலியும் பூனையும்

இமயமலைச் சாரலில் வானோங்கிய மரங்கள் செறிந்த ஒரு வனம் உண்டு. அந்த வனத்தில் கிளைகளை வெகு தூரம் பரப்பிக்கொண்டும், விழுதுகளை நாலா பக்கங்களிலும் தூண்களைப் போல விட்டுக்கொண்டும் பழமையான ஆல மரம் ஒன்று கூடாரம் போல் தழைத்து இருந்தது. அம்மரத்தினடியில் பல மிருகங்களும், கிளைகளில் பல பறவைகளும் தங்கி வசித்து வரும்.

அந்த அரணியத்தில் சஞ்சரிக்கும் வேடனொருவன், இவ்வெளிய பிராணிகளைப் பிடிப்பதற்காகத் தினந்தோறும் மாலைப் பொழுதில் இந்த மரத்தடிக்கு வந்து, ஒரு வலையைக் கட்டிவிட்டுப் போவான். அவ்வலையில் வைத்துள்ள இறையைத் தின்ன முயற்சிக்கும் மிருகங்களும், பறவைகளும் வலையில் சிக்கிக்கொள்ளும். அவன் அதிகாலையில் வந்து அவற்றைப் பிடித்துக்கொண்டு செல்வான்.

இந்த ஆல விருட்சத்தின் அடியிலுள்ள ஒரு வளையில் ஓர் எலியும், அம்மரத்தின் ஒரு பொந்தில் ஒரு பூனையும் வசித்து வந்தன. வேடன் கட்டிய வலைக்குள் ஓர் இரவு பூனை அகப்பட்டுக்கொண்டது. தனது இயற்கை விரோதியான பூனை வலையில் அகப்பட்டுக்

கொண்டதை யறிந்த எலி, சிறிதும் அச்சமின்றி வெளியில் வந்து வேடன் வைத்த உணவைத் தின்னத் தொடங்கிற்று.

இதைக் கண்ணுற்ற ஒரு கீரிப்பிள்ளை, அந்த எலியைக் கொன்று தின்பதற்குத் தருணம் பார்த்துச் சற்றுத் தூரத்தில் பதுங்கி யிருந்தது. மரத்தின் கிளை யொன்றில் ஓர் ஆந்தையும் அதைக் கௌவிக்கொண்டு போக உட்கார்ந்திருந்தது. இவற்றையெல்லாம் உணர்ந்த எலி, சிறிதும் திகைக்காமல் பின்வருமாறு ஆலோசித்தது:

"வலையை விட்டு அப்பால் ஓடினால், கீரிப்பிள்ளை என்னைப் பிடித்து விழுங்கிவிடும்; இங்கேயே இருந்தால், ஆந்தை பறந்து வந்து என்னைக் கௌவிக்கொள்வதில் ஐயமில்லை. வலைக் கயிறுகள் அறுபட்டுப்பூனை தப்பினாலோ, அது என்னைக்கொன்று தின்னாமல் விடாது; அல்லது வேடன் வந்தாலும் என் உயிருக்கு இறுதி நேர்வது திண்ணம். இவ்விதம் நாலா பக்கங்களிலும் சத்துருக்களால் நான் சூழப்பட்டிருக்கிறேன். என்றாலும் இச் சமயம் தைரியத்தைக் கைவிடக்கூடாது. ஆபத்துக் காலத்தில் சத்துருவையும், மித்திரனாகக் கருதிச் சினேகஞ் செய்துகொண்டு தப்பித்துக் கொள்ளலாம். பூனையும் வலையில் அகப்பட்டுத் திகைக்கின்றது. ஆதலால் அதனுடன் நட்புக்கொண்டு, அதை

யும் தப்புவித்து, நானும் தப்பியோடுவதே நலம்.''

பிறகு எலி பூனையை நோக்கி, "அன்புள்ள பூனையாரே! நாமிருவரும் இயற்கையில் விரோதிகளே யென்றாலும், ஆபத்திலகப்பட்டுக் கொண்டிருக்கிறோம். உம்மைக் காலையில் வேடன் பிடித்துக்கொள்வான். என்னைக்கீரியும், ஆந்தையும் பிடிக்கச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கின்றன. உமக்கு அருகில் பதுங்கியிருக்க எனக்கு இடம் தந்தால், வலைக் கயிறுகளை அறுத்து உம்மை விடுவிப்பேன். நான் உமது அருகிலிருக்கும்போது கீரியும், ஆந்தையும் உமக்குப் பயந்து இங்கு வரமாட்டா'' என்று சொல்லிற்று.

தனது நிலைமையை யுணர்ந்த பூனையும், எலியின் ஆலோசனைக்கு இணங்கிற்று. இயற்கைக்கு மாறாக அவை இரண்டும் நட்புக் கொண்டன. எலி, பூனையின் ஆதரவிலிருப்பதை அறிந்த கீரியும், ஆந்தையும் அவ்விடத்தை விட்டு அகன்றன.

பிறகு எலி வலையின் கயிறுகளைத் தன் கூரிய பற்களால் கடிக்கத் தொடங்கிற்று. பொழுது விடிய அதிக நேரம் இருந்ததால், எலி கயிறுகளை மெதுவாகவே அறுத்து வந்தது. இவ்விதம் எலி தாமதமாக அறுப்பதைக் கண்ட பூனை, வேகமாக அறுக்கும்படி அதைத் தூண்

டிற்று. அதற்கு எலி, "நண்பரே! உம்மை இப்பொழுதே தப்பியோட விட்டால், இரவு முழுதும் ஆகாரமில்லாமல் பசியுடனிருக்கும் நீர் என்னை இலேசில் விடுவீரா? என்றாலும், நான் உம்மைக் கைவிடமாட்டேன். வேடன் வருவதற்குள் வலையை அறுத்து விடுகிறேன்; பயப்படவேண்டாம்" என்றது.

இரவு முடிந்து பொழுதும் விடிந்தது. வேடன் மரத்தை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவனைக்கண்ட பூனை பயந்து நடுநடுங்கிற்று. உடனே பாக்கியிருந்த கயிற்றை எலி அறுத்துவிட்டுத் தனது வளைக்குள் ஓடி நுழைந்து கொண்டது. பூனையும் உயிர் தப்பி, மரத்திலேறிப் பொந்தில் பதுங்கிக்கொண்டது. அன்று வேடன் ஏமாந்துபோய், அறுபட்ட வலையை யெடுத்துக்கொண்டு வருத்தத்துடன் வீடு திரும்பினான்.

பகைவரிடமும் உண்மையாக நட்புக் காட்டியதனால், எலியும் பூனையும் ஆபத்திலிருந்து மீண்டன.

சொல் விளக்கம்:—செறிந்த=அடர்ந்த. அரணியம், ஆரணியம், வனம்=காடு. ஐயம்=சந்தேகம். இறுதி=முடிவு. நேர்வது=உண்டாவது. திண்ணம்=உறுதி.

கூரிய, கூறிய; வலை, வளை—வித்தியாசத்தைக் கவனி.

கேள்விகள் :—

1. எலிக்கு ஏற்பட்ட ஆபத்துக்கள் யாவை?
2. எலி தனது சத்துருவாகிய பூனைக்கு எவ்வாறு உதவி செய்து தப்பித்துக்கொண்டது?

10. பந்தய விளையாட்டுக்கள்

மாணிக்கம் :—மணி, வா ! என்ன செய்தி ?

மணி :—நமது பாடசாலையில் வருஷாந்தரப் பந்தய விளையாட்டுக்கள் இன்று சாயங்காலம் நடக்கப்போவதை மறந்துவிட்டாயோ ? அதற்கு உன்னைக் கூப்பிட வந்தேன்.

மாணிக்கம் :—மணி, நீ எந்தப் பந்தயங்களில் சேர்ந்திருக்கிறாய் ?

மணி :—நூறு கஜ ஓட்டம், மூன்றுகால் ஓட்டம், கோணிப்பை ஓட்டம் இவைகளில் ஓடப்போகிறேன்.

ஸரோஜா (மாணிக்கத்தின் தங்கை) :—அண்ணா ! கோணிப்பை ஓட்டம் என்றால் என்ன ?

மாணிக்கம் :—சாதாரணச் சாக்குப் பை ஒன்றினுள் கால்களை விட்டு, இடுப்புவரை அதை இழுத்துக் கட்டிக்கொண்டு ஓடுதல். இவ்விதம் பல பேர்கள் ஓடுவதில் வேகமாக முதலில் வருபவருக்கு இனாம் கொடுக்கப்படும்.

ஸரோஜா :—ஓகோ ! அது மிக்க வேடிக்கையாக இருக்கும்.

மணி :—ஸரோஜா ! பெண்களுக்கும் பந்தய விளையாட்டுக்கள் இருக்கின்றனவே! நீ எதிலாவது சேர்ந்திருக்கிறாயா?

ஸரோஜா :—ஊசி நூல் விளையாட்டு, மெழுகுவர்த்தி ஓட்டம், நாற்காலியைச் சுற்றி ஓடுதல் இவைகளில் சேரப் பெயர் கொடுத்திருக்கிறேன்.

மணி :—இவைகள் புதுமையாக இருக்கின்றனவே! இவைகள் நடத்தப்படும் விதத்தை உபாத்தியாயர் விளக்கினரா?

ஸரோஜா :—ஆமாம். ஊசி நூல் விளையாட்டில் ஊசி ஒன்றை நான் வைத்துக்கொண்டிருப்பேன். எனது தோழி ஒருத்தி குறிப்பிட்ட ஓரிடத்திலிருந்து ஓடிவந்து ஒரு நூலை என்னிடம் கொடுப்பாள். சரேலென்று அதை நான் ஊசியில் கோத்து அவளிடம் கொடுப்பேன். அவள் அதை எடுத்துக்கொண்டு, வேகமாக முன் இருந்த இடத்திற்கு ஓடி அங்குள்ள உபாத்தியாயரிடம் கொடுப்பாள். இவ்விதம் பல பெண்கள் ஓடுவதில் யாவர் ஊசியில் நூலைக் கோத்தும், வேகமாக ஓடியும் முதலில் வந்து சேருகிறார்களோ, அந்த ஜோடிப் பெண்களுக்குத்தான் பரிசு.

ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றிக் கையில் எடுத்துக்கொண்டு, அனைவரிலும் முதலாக அவியாமல் அதை ஓடிச் சேர்ப்பித்துப் பரிசு பெறும் பந்தயத்திற்கு மெழுகுவர்த்தி ஓட்டம் என்று பெயர்.

மாணிக்கம் :—நாற்காலி விளையாட்டை நான் பார்த்திருக்கிறேன். அது மிகவும்

விநோதமாயிருக்கும். ஒரு வட்டமான கோட்டில் பந்தயத்திற்கு ஓடும் பெண்கள் நிற்க



வேண்டும். விளையாடுபவர்களின் தொகையில் ஒன்று குறைவான எண்ணிக்கையுள்ள நாற்காலி கள் வட்டத்தின் நடுவில் போடப்பட்டிருக்கும். பந்தயம் விடுபவர் ஓர் ஊதலை ஊத ஆரம் பித்து ஊதிக்கொண்டே யிருப்பார். உடனே வட்டத்தைச் சுற்றிப் பந்தயக்காரர் ஓடிக் கொண்டிருக்கவேண்டும். ஊதுவதைத் திடீ ரென்று நிறுத்தியவுடன், ஒவ்வொரு பெண் ணும் ஒவ்வொரு நாற்காலியில் உட்காரவேண் டும். ஒரு பெண் மட்டும் உட்கார நாற்காலி கிடைக்காமல் ஏமாந்துவிடுவாள். அவளை நீக்கி விட்டும், ஒரு நாற்காலியை எடுத்துவிட்டும் மறு

படியும் பந்தயம் விடப்படும். இப்படியே, ஒரு நாற்காலியும் இரண்டு பெண்களும் மிகுதியாகும் வரையில் செய்துவர வேண்டும். கடைசியில் அவ்விருவர்களில் எவள் முன்னதாக ஓடி நாற்காலியில் உட்காருகிருளோ அவளே ஜயமடைந்தவள். இந்த விளையாட்டைப் பையன்களும் விளையாடலாம்.

மணி:—மாணிக்கம்! நீ சேர்ந்திருக்கிற விளையாட்டுக்களைச் சொல்லவில்லையே!

மாணிக்கம்:—எனக்கு வேகமாக ஓடப் பழக்கம் இல்லாததால் தரையில் தாண்டுதல், கணிதப் பந்தயம், கயிறு பிடித்து இழுத்தல் இம்மூன்றுக்கும் பெயர் கொடுத்திருக்கிறேன்.

ஸரோஜா:—அண்ணு! கணிதப் பந்தயம் எவ்வாறு விடப்படும்?

மாணிக்கம்:—கணிதப் பந்தயத்தில் என் தோழன் ஒருவன் ஓடி வந்து ஒரு கணக்கு எழுதிய காகிதத்தை என்னிடம் கொடுப்பான். நான் கணக்கைச் சரிவரச் செய்து, விடையை எழுதி அவனிடம் கொடுப்பேன். அதை வாங்கிக் கொண்டு வேகமாக ஓடிப் பந்தயம் விட்டவரிடம் அவன் கொடுக்கவேண்டும். இவ்வாறு பலர் கொண்டுவந்து கொடுப்பதில், சரியான விடையுடன் வந்தவர்களில் எவன் முதல்வனே அவனே ஜயித்தவன். அவனுக்கும், சரியாகக் கணக்கைச் செய்துகொடுத்த அவனது தோழனுக்கும் இனும்

வழங்குவார்கள். முதலில் ஓடிவந்தாலும் விடை சரியாக இல்லாவிட்டால் பரிசு கிடைக்காது.

மணி :—என் தம்பி இரத்தினம் கூட நொண்டி ஓட்டம், உருளைக்கிழங்குகளை அல்லது கற்களை வரிசையாக வைத்துப் பொறுக்குதல், சிறு கரண்டியில் எலுமிச்சம்பழம் ஒன்றை ஏந்திக்கொண்டு, அது கீழேவிழாதவாறு ஓடுதல் முதலிய பந்தயங்களில் சேர்ந்திருக்கிறுன்.

மாணிக்கம் :—சரி, நேரமாகிவிட்டது. நீ வீடு சென்று உன் தம்பியுடன் தயாராக இரு. நான் விளையாட்டு உடுப்புக்களைத் தரித்துக்கொண்டு ஸரோஜாவுடன் உங்கள் வீட்டிற்கு வருகிறேன். பிறகு பந்தய விளையாட்டு நடைபெறும் இடத்திற்கு நாம் அனைவரும் சேர்ந்து செல்லுவோம்.

சொல் பயிற்சி :—கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைத்து நிரப்புக.

1. கரண்டியில் — ஏந்திக்கொண்டு — சுந்தரம் — வராததால் பந்தயம் தோற்றுன்.

2. கமலம் — அவியாமல் ஏந்திக்கொண்டு முதலில் — பந்தயம் ஜயித்தாள்.

கேள்விகள் :—

1. பந்தய விளையாட்டுக்களால் உண்டாகும் நன்மைகள் எவை?
2. ஆண் மக்களுக்குரிய விளையாட்டுக்கள் எவை?
3. பெண் மக்களுக்குரிய விளையாட்டுக்கள் எவை?
4. இருவர் ஜோடியாகப் பரிசு பெறக் கூடிய பந்தய விளையாட்டுக்கள் எவை?

11. கடிதம்—I

18, ராஜ வீதி, காஞ்சீபுரம்,
29—9—1935.

திருவளர் செல்வி கனகாம்புஜத்துக்கு இறைவனருளால் நலங்கள்பலவும் உண்டாகுக. இங்கு யாவரும் சுகமே. அவ்விடத்திய நல மறிய ஆவல்.

உன் தாயார் எழுதிய கடிதம் கிடைத்தது. உனது பள்ளிக்கூடத்தில் நடைபெற்ற பரிசளிப்பில் கோலம் போடுவதிலும், தையல்வேலையிலும் நீ முதன்மைப் பரிசு பெற்றதையும், வீட்டில் ஒழுங்காய்ச் சங்கீதம் பயின்று வருவதையும் அக்கடிதத்தால் அறிந்து நாங்கள் மகிழ்கிறோம்.

புது மாதிரியான கல்வியை நீ பெறுவது அவசியமே. எனினும், வீட்டு வேலைகளையும், நமது பழைய ஆசாரங்களையும் அலட்சியம் செய்யாமல் போற்றிவருவாயாக. வருகிற நவ ராத்திரிக் கொலுவிற்குரிய பொம்மைகளையும், உனக்காக உன் மாமி வாங்கி வைத்திருக்கும் பட்டுச் சட்டையையும் இன்னும் ஒரு வாரத்தில் அனுப்புகிறேன். எங்கள் வந்தனத்தை உனது பெற்றோர்க்குத் தெரிவிக்கவும்.

இங்ஙனம்
உனது அன்புள்ள மாமன்
ஷண்முக சுந்தரம்.

விலாசம் :—
திருவளர் செல்வி, கனகாம்புஜம்,
நான்காம் வகுப்பு,
சரசுவதி பாடசாலை, திருவாரூர்.

12. மரியாதை முறை

நமது தினசரி வாழ்க்கையில் பெற்ரேர், உறவினர், நண்பர், அயலார் முதலிய பலருடன் நாம் பழகி வருகிரேம். அவ்வாறு பழகுவதில் சரியான மரியாதை முறைகளை அறிந்து, நடந்துகொள்ள வேண்டியது நமது கடமையாகும். நல்ல மரியாதைக் குணமுள்ளவர்களை யாவரும் விரும்புவார்கள். அவர்களைப் பிறரும் மரியாதையுடன் நடத்துவார்கள். 'மரியாதை கொடுத்து மரியாதை வாங்கு' என்பது ஒரு பழமொழி. மரியாதை முறைகளில் பழகியவர்களே உத்தியோகங்களுக்குத் தகுதியானவர்களாகக் கருதப்படுகிருர்கள்.

தாயார், தந்தையர், ஆசிரியர், மேலதிகாரிகள் முதலியவர்கள் வயதிலும், அறிவிலும் நமக்குப் பெரியவர்கள். இவர்களிடத்தில் வணக்கமும்,மரியாதையும் காட்டுதல் வேண்டும். அவர்களைக் கண்டால் எழுந்து வந்தனம் செய்து, அவர்கள் ஆசனித்திலமர்ந்த பிறகே நாம் உட்காருவது அவசியம். அவர்கள் பேசும்பொழுது குறுக்காகத் தடுத்துப் பேசுவதும், எதிர்த்துப் பேசுவதும் மரியாதைக் குறைவாகும். பெரியோர்களை 'நீ' என்று அழைக்காமல் 'நீங்கள்' அல்லது 'தாங்கள்' என்று அழைக்கவேண்டும். எப்பொழுதும் அவர்

களின் ஆசீர்வாதத்தைப் பெற முயற்சிப்பது நலம்.

பொதுவாகப் பிறரிடத்தில் நாம் ஒரு பொருளை வேண்டும்பொழுது நயமாகக் கேட்பதும், அவர்கள் செய்யும் உபகாரத்திற்காக வந்தனம் சொல்லுவதும் மரியாதை முறைகளாம். நமக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களைப்பற்றிப் பிறர் பேசுகையில் ஒளிமறைவாக இருந்து ஒட்டுக்கேட்டலும், ஒருவரைப் பற்றி, அவர் நேரில் இல்லாதசமயத்தில், அவதூறு பேசுதலும் தகாத செயல்கள்.

பாடசாலைத் தோழர்களோடும், இதர நண்பர்களோடும் மரியாதையாகப் பழகுவதும் அவசியமே. அவர்களைக் கோபித்து வைதலும், பரிகாசப் பெயரிட்டு அழைப்பதும், அவர்களைப்பற்றிக் கோள் சொல்லுவதும் முற்றிலும் விலக்கத் தக்கவை. விளையாட்டுக் காலங்களில் பாரபட்சமின்றிப் பெருந்தன்மையாக நடந்துகொள்ளல் வேண்டும்.

வீதிகளில் பெரியோர்களுக்கும், பெண்பாலருக்கும் வழிவிட்டு நாம் பின் செல்வதே உசிதம். அதே விதம் ரயில் முதலிய வண்டிகளிலும், திரளான கூட்டங்களிலும், பந்தி போஜனங்களிலும் அவர்களுக்கு இடம் கொடுத்துப் பிறகு நாம் அமர்வதுதான் நல்ல முறை. பலருடன்

உண்ணும்பொழுது, பிறருக்கு அருவருப்பு உண்டாகாதபடி நடந்துகொள்ளவேண்டும்.

சிறுவர் சிறுமிகளிடத்தும், வேலைக்காரர்களிடத்தும் அதிகாரத்துடன் நடந்துகொள்ளாமல் அன்பாகவும், மரியாதையாகவும் பழகுதல் நமது கடமையாகும். "கீழோராயினும் தாழ உரை" என்றபடி, அவர்களிடம் கடுஞ் சொற்களை உபயோகிக்காமல் நயமாகப் பேசுதலே உத்தமம்.

அனைவரும் விரும்பும்படியான நடை, உடை, ஒழுக்கம் இவைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும். எப்பொழுதும் உடல், உடைகளில் சுத்தமாக இருப்பதுடன், முகமலர்ச்சியுடனும் இருக்கவேண்டும். பிறருடைய மனம் நோவாமல் நடக்கப் பழகுவதே மரியாதை முறைகளின் அடிப்படைக் குணம். மரியாதைக் குணமுள்ளவர்கள் எப்பொழுதும், எவ்விடத்தும், சுயநலத்தைவிட்டுப் பிறர் நலத்தை நாடுவர். 'பிறர் உன்னிடத்தில் எவ்வாறு பழகவேண்டுமென்று விரும்புகிருயோ, அவ்வாறே நீயும் அவர்களிடம் நடந்துகொள்' என்பது ஒரு சிறந்த விதியாகும்.

சொல் விளக்கம் :—உறவினர்=சொந்தக்காரர். அயலார்=அக்கம்பக்கத்திலுள்ளவர். ஆசிரியர்=உபாத்தியாயர். ஆசனம் = உட்காரும் பீடம். அவதூறு = பழி. பாரபட்சம்=ஓர வஞ்சகம். சுயநலம்=தன்னலம்.

கேள்விகள் :—

1. பெரியோர்களைக் கண்டால் நாம் என்ன செய்ய வேண்டும் ?
2. சிறுவர்களிடத்தும், வேலையாட்களிடத்தும் நாம் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் ?
3. மரியாதை முறைகளின் அடிப்படைக் குணம் யாது ?

பயிற்சி :—

1. அடியிற் குறித்த வார்த்தைகளில் சாதாரண அர்த்தமுள்ள சொற்களையும், அதற்கு எதிரான அர்த்தமுள்ள சொற்களையும் ஜோடியாக எடுத்து எழுது. (உதாரணம் :—நல்ல × கெட்ட).

சரியான, மரியாதை, அநாவசியம், அநுசிதம், சிறுவர், கடுஞ்சொல், பிறநலம், சுத்தம், அவமரியாதை, பெரியோர், சுயநலம், தப்பான, அசுத்தம், அவசியம், இன்சொல், உசிதம்.

2. பின்வரும் வாக்கியங்களை மௌனமாக வாசித்துத் தப்பான மரியாதை முறைகளுக்கு எதிராக × இக்குறியிடவும் :—

1. ராமன் தாயாரை எதிர்த்துப் பேசினான்.
2. சீதை வேலைக்காரியுடன் அன்பாகப் பேசினாள்.
3. புகைவண்டியில் முடவன் ஒருவனுக்கு இடங் கொடாமல் வேலு உட்கார்ந்து கொண்டான்.
4. ராமா ! தயவுசெய்து உன் புத்தகத்தைக் கொடு.
5. கால் தூசியை வெளியில் தட்டாமல் வேலைக்காரன் உள்ளே நுழைந்தான்.

13. லாபத்தில் பாதி

முன்னொரு காலத்தில் விஜயநகரத்தைக் கிருஷ்ணதேவராயர் என்னும் புகழ்பெற்ற அரசர் ஆண்டு வந்தார். அவரிடம் ராமன் என்ற ஒரு விகடகவி இருந்தான். அவன் தெனலி என்ற ஊரில் பிறந்தமையால், அவனை எல்லோரும் தெனலிராமன் என்று கூப்பிடுவது வழக்கம். இவன், தனது விகடப்பேச்சுக்களால் அரசருக்கு மகிழ்ச்சி விளைவித்தும், நற்போதனை செய்தும் வந்தான். கிருஷ்ணதேவராயரும் பல சன்மானங்கள் அளித்து அவனை ஆதரித்து வந்தார்.

ஒரு தருணம் வேஷக்காரர்கள் சிலர் அரண்மனையில் வந்திருந்தார்கள். அவர்கள் ராஜ சபையில் ஸ்ரீகிருஷ்ண பகவானது பால லீலைகளை ஒரு நாள் சாயங்காலம் நடித்துக்கொண்டிருந்தார்கள். மஹாராஜாவும், மந்திரி முதலான உத்தியோகஸ்தர்களும், மற்றும் பல பிரபுக்களும் அதைக் காண விஜயஞ்செய்திருந்தனர்.

நாடகத்தின் நடுவில் தெனலிராமன் ஏதாவது விகடம் செய்து, அதைக் கெடுத்துவிடுவானென்று அரசர் அவனை அழைக்கவில்லை. என்றாலும், நாடகம் நடப்பதைக் கேள்விப்பட்ட தெனலிராமன், அதைக் காண விரும்பி அரண்மனையை அடைந்தான்.

அங்கிருந்த முதல் வாயிற்காப்போன் அவனை உள்ளே விட மறுத்தான். மன்னனிடமிருந்து தனக்குக் கிடைக்கும் சன்மானத்தில் பாதியைக் கொடுப்பதாகத் தெனுலிராமன் அவனுக்கு வாக்களித்தான். அதன்பேரில் ராமனை அவன் உள்ளே செல்ல விடுத்தான்.

நாடக மண்டபத்திற்கு அருகில் தெனுலிராமன் சென்றதும், அங்கிருந்த இரண்டாவது வாயிற்காப்போனும் அவனைத் தடுத்தான். அவனுக்கும் தனது வெகுமானத்தில் பாதியைக் கொடுப்பதாக ராமன் உறுதி கூறி உள்ளே சென்றுன்.

வேஷக்காரர்கள் நல்ல சங்கீதத்துடனும், அபிநயத்துடனும் மிகத் திறமையாக நடித்துக் கொண்டிருந்தார்கள். கிருஷ்ணதேவராயரும், சபையோரும் நாடகத்தை ஆவலுடன் கவனித்து வந்தார்கள். கிருஷ்ண பகவான் வெண்ணெய் திருடியதை வேஷக்காரன் நடித்துக் கொண்டிருந்தபொழுது, தெனுலிராமன் ஓடி அவனருகில் சென்று மத்தினுல் அவனை ஓங்கி யடித்தான். உடனே வேஷதாரி ஓலமிட்டு அழ ஆரம்பிக்கவே, தெனுலிராமன் சிரித்துக்கொண்டு “கிருஷ்ண பகவான் எத்தனையோ மத்தடிகள் பட்டார். நீ இந்த ஒரு அடிக்கே அழுது கூச்சலிடுகிருயே” என்று விகடமாகச் சொன்னுன். இதைக்கேட்ட

சபையோர் சிரிக்க ஆரம்பித்தனர். சபை யில் குழப்பமுண்டானதால் அரசர், தெனுலி



ராமனுக்குத் தண்டனையாகப் பிரம்பினுல் பன்னி ரண்டு அடிகள் அடிக்கும்படி சேவகர்களுக்கு உத்தரவிட்டு, "ராமா! இன்று உனது விகடத் திற்கு வெகுமதி இதுதான்" என்றனர்.

சேவகர்கள் அவனை அடிக்கப் பிரம்புடன் வந்தபொழுது, தெனுலிராமன், "மஹா ராஜாவே! தாங்கள் இன்று எனக்கு அளிக்கும் வெகுமானத்திற்கு இரண்டு பங்காளிகள் இருக்கிறுர்கள். நான் வாக்களித்துள்ள பிரகாரம், இது அவர்களுக்கே உரியதாகும். அரண்மனை வாயிற்காப்போர் இருவருமே அப் பங்காளிகள். தயை செய்து அவர்களை

அழைத்துவரச் சொல்லிக்கேளுங்கள்'' என்று தாழ்மையுடன் வேண்டிக் கொண்டான். அரசரும் சிறிது திகைத்து வாயிற்காப்போர்களை வரவழைத்தார்.

அரசர் சமூகத்தில் வாயிற்காப்போர் தங்கள் உடன்படிக்கையை ஒப்புக்கொண்டனர். தெனாலி ராமன் அரசரைப் பார்த்து, "மஹாராஜாவே! எனது வெகுமதியாகிய பன்னிரண்டு அடிகளையும், உடன்படிக்கையின்படி இந்த இருவருக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டுகிறேன்'' என்றான். அவ்வாறே காவற்காரர் இருவருக்கும் முறையே ஆறு ஆறு அடிகள் கிடைத்தன. தெனாலிராமன் ஒரு அடியும் படாமலே தப்பித்துக்கொண்டான். ராமனது சாமர்த்தியத்தைக் கண்ட கிருஷ்ண தேவராயரும், சபையோரும் அவனை மெச்சினார்கள்.

சொல் விளக்கம் :—சன்மானம் = பரிசு, இனாம். லீலை = விளையாடல். அபிநயம்=சைகை. அடாத=தகாத.

கேள்விகள் :—

1. தெனாலிராமனை அரசர் ஏன் நாடகத்திற்கு அழைக்கவில்லை?
2. வாயிற்காப்போர்களுக்கு என்ன கொடுப்பதாகச் சொல்லி ராமன் நாடகசாலைக்குட் சென்றான்?
3. கிருஷ்ண வேஷக்காரனை ராமன் என்ன செய்தான் ?
4. ராமனுக்கு அன்று கிடைத்த வெகுமதி யாது? அதைப் பெற்றுக்கொண்டவர்கள் யாவர்?

14. இந்தியச் சிறுவர்கள்

மலையாளச் சிறுவன் :—நான் மலையாளத்தில் பிறந்து வளர்ந்து மலையாள மொழி பேசும் ஒரு சிறுவன். என் பெயர் ராமன் நாயர். எங்கள் நாடு மேற்குமலைத் தொடருக்கும், அரபிக்கடலுக்கும் இடையில் உள்ளது. அதைக் கேரள தேச மென்றும் சொல்லுவார்கள். வைகாசி, ஆனி, ஆடி மாதங்களில் ஏராளமான மழை பொழிவதால் கேரள தேசம் நீர்வளம், நிலவளம் மலிந்து, பல இயற்கைக் காட்சிகள் பொருந்தி விளங்குகின்றது. தென்னை, கமுகு, தேக்கு, மிளகு, ஜாதிக்காய், கிராம்பு, ஏலம் முதலியன அங்கு மிகுதியாக விளைகின்றன. நாள் தோறும் இருவேளை நீராடி எமது உடலையும், உடையையும் சுத்தமாக வைத்துக் கொள்வோம். நாங்கள் கல்வியிலும் தொழில் முறைகளிலும் ஊக்கமுள்ளவர்கள். ஆவணி மாதத்தில் வரும் ஓணம் பண்டிகை எங்களுக்கு முக்கியமானது.

மைசூர்ச் சிறுவன் :—மைசூர் இராஜ்ஜியத்தில் பிறந்து வளர்ந்துள்ள என்னை வீரண்ணு என்று அழைப்பார்கள். நாங்கள் பேசுவது கன்னட பாஷை. எமது நாட்டில் பாயும் காவிரி நதியில் கண்ணம்பாடி என்ற இடத்தில் ஒரு பெரிய அணை கட்டி, தண்ணீரைத் தேக்கி

நீர்ப்பாசனம் செய்கிறார்கள். சிவசமுத்திரம் என்னும் இடத்தில் காவிரியின் நீர் வீழ்ச்சியினால் மின்சார சக்தி உண்டு பண்ணி, பெங்களூர், கோலார் முதலிய இடங்களில் மின்சார விளக்குகள் போடவும், தொழிற்சாலைகளில் இயந்திரங்கள் ஓடவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கோலாரில் தங்கச் சுரங்கமும், பத்ராவதி என்னுமிடத்தில் ஓர் இரும்புத் தொழிற் சாலையும், வேறுபல இடங்களில் பட்டுநூல் சேகரித்தலும் உண்டு. எங்கள் நாடு ஒரு இந்திய மன்னரால் ஆளப்பட்டு வருகிறது. நாங்கள் கண்ணியமும், ராஜ விசுவாசமும், தெய்வ பக்தியும் உள்ளவர்கள்.

ஆந்திர தேசச் சிறுவன்:—சென்னை இராஜதானியின் வட பாகத்திலுள்ள தெலுங்கு நாட்டினன் நான். என் பெயர் சீதாராமய்யா. கிருஷ்ணா, கோதாவரி முதலிய புண்ணிய நதிகள் பாய்வதால் எங்கள் தேசம் மிகச் செழிப்புள்ளது. இந் நதிமுக நிலங்களில் நவதானியங்களும், பருத்தி, புகையிலை, கரும்பு முதலியனவும் ஏராளமாய்ப் பயிர் செய்யப்படுகின்றன. தெலுங்கு எங்களது தாய் மொழி. எங்கள் மொழியையும், நாட்டையும் நாங்கள் பெரிதும் போற்றுவோம்.

நிஜாம் இராஜ்ஜியச் சிறுவன்:—நான் நிஜாம் இராஜ்ஜியத்தைச் சேர்ந்த மகமதியச் சிறுவன். என்பெயர் மகமது இப்ராஹீம். எங்களுடைய தாய்மொழி ஹிந்துஸ்தானி. தட்சிண பீட பூமியைச் சார்ந்த எமது இராஜ்ஜியத்தில் கோதாவரி, கிருஷ்ணா நதிகளும், அவைகளின் உபநதிகளும் பாய்கின்றன. என்றாலும் பெரும் பான்மையான பாகம் செழுமை குறைந்தது. சரித்திர சம்பந்தமான பல பெரிய ஊர்கள் இங்கே இருக்கின்றன. எங்கள் இராஜ்ஜியத்தை ஒரு மகமதிய மன்னர் ஆண்டுவருகிறார். நடை யுடை பாவனைகளில் நாங்கள் இந்துக்களைப்போல் இராவிட்டாலும், எங்கள் நாட்டில் பல இந்துக்கள் இருக்கிறார்கள். அவர்களோடு நாங்கள் நட்புடன் பழகி வருகிறோம்.

மகாராஷ்டிரச் சிறுவன்:—பம்பாய் இராஜதானியிலுள்ள மகாராஷ்டிர நாட்டில் பிறந்து வளர்ந்த எனது பெயர் மகாதேவ தேசாய். நான் பேசுவது மராட்டிய பாஷை. சரித்திரத்தில் புகழ்பெற்ற சிவாஜி எங்கள் நாட்டினரே. பூனா, பம்பாய் இவை எங்களுக்கு முக்கிய நகரங்கள். எமது மாகாணத்தில் தொழில் முயற்சியும், வியாபார முயற்சியும் அதிகம். எங்கள் நாட்டு வீரர்களது தீரச்செயல்களைப் பற்றிய கதைகளைக் கேட்க எங்களுக்கு ஆசை அதிகம்.

வங்காளச் சிறுவன் :—கங்கை, பிரமபுத்திரா நதிகள் பாயும் சமவெளிப் பிரதேசமாகிய வங்காள மாகாணத்தைச் சேர்ந்தவன் நான். என் பெயர் நரேந்திரநாத். சிறந்த வியாபாரஸ்தலமாகிய கல்கத்தா எங்களுக்குப் பிரதான பட்டணம். இரும்பும், நிலக்கரியும் வெட்டி யெடுக்கப்படும் சுரங்கங்களுக்கும், நவதானியம், சணல் முதலிய விளைபொருள்களுக்கும் எங்கள் மாகாணம் பெயர் பெற்றது. உலகம்புகழும் பெருமை வாய்ந்த ரவீந்திர நாத் தாகூர், ஜெகதீச சந்திர போஸ், சுவாமி விவேகானந்தர், ஈசுவர சந்திர வித்யாசாகரர், ராம கிருஷ்ண பரமஹம்சர் முதலிய பெரியார்கள் அவதாரஞ் செய்த புண்ணிய நாடு எமது வங்காள மாகாணமே. நவராத்திரிப் பண்டிகை எங்களுக்கு முக்கியமானது. எங்கள் நாட்டுச் சிறுவர்கள் கல்வியிலும், விளையாட்டுச்களிலும் ஊக்கமும் சுறுசுறுப்பும் உள்ளவர்கள்.

பஞ்சாப் சிறுவன் :—இந்தியாவின் வடமேற்குப் பாகத்திலுள்ள பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்தவன் நான். சீக்கியமதத்தினனாகிய எனது பெயர் இருதய லால். ஸிந்து முதலிய ஐந்து நதிகள் பாய்வதால் எங்களது நாடு மிகச் செழிப்படைந்துள்ளது. இங்குக் கோடைக்

காலத்தில் உஷ்ணமும், குளிர் காலத்தில்

பனியும், குளிரும் அதிகம். எங்கள் நாடு கம்பளி, பட்டு, கோதுமை இவைகளுக்குப் பெயர்பெற்றது. இங்குச் சீக்கியர்கள், மகமதியர்கள், இந்துக்கள் ஆகிய மும்மதத்தினரும் வசிக்கிறோம். நாங்கள் உறுதியான உடலும், புய பலமும் பெற்றவர்கள். ஐரோப்பிய மகா யுத்தத்தில் பலவீரச்செயல்களைப்புரிந்தவர்கள் நாங்களே.

சொல் விளக்கம் :—நவதானியங்கள் = நெல், கோதுமை, எள், கொள், கடலை, உளுந்து, பயறு, துவரை, மொச்சை ஆகிய ஒன்பது வகைத் தானியங்கள். நதிமுக நிலம்=இதை இங்கிலீஷில் டேல்டா என்பார்கள். போற்றுவோம்=பாராட்டுவோம். புயபலம்=தோள் வலிமை. பீடபூமி=மேடான சமவெளி. அவதாரம் செய்த=பிறந்த.

கேள்விகள் :—

1. கேரள தேசம் எங்கே இருக்கிறது? அங்குள்ளவர்கள் என்ன மொழி பேசுகிறார்கள்? அவர்களுக்கு முக்கியப் பண்டிகை எது?
2. மைசூர் ராஜ்ஜியத்தில் தங்கம் எங்கு கிடைக்கிறது? மைசூரில் முக்கிய பாஷை எது?
3. மகாராஷ்டிரர்களுக்கு எதில் ஆசை அதிகம்?
4. வங்காளத்தில் பிறந்த பெரியார்களில் நால்வர் பெயர்களைச் சொல்லு.
5. பஞ்சாபிலிருந்து கிடைக்கும் முக்கியப் பொருள்கள் யாவை?

———

15. புகழேந்திப் புலவர்

நமது தமிழ் நாட்டில் சிறந்து விளங்கிய பெரும் புலவர்களுள் புகழேந்திப் புலவரும் ஒருவராவர். இவர் சுமார் எண்ணூறு வருஷங்களுக்கு முன் செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள பொன் விளைந்த களத்தூரில் பிறந்தவர். இவர் வேளாளர் குலத்தினர். கம்பர், ஒட்டக்கூத்தர், ஔவையார் முதலிய பெரும் புலவர்களோடு நமது புகழேந்திப் புலவர் ஒரே காலத்தில் வாழ்ந்திருந்தவர். புகழேந்திப் புலவர் இளமைப்பருவத்திலேயே தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்று, கவி செய்யும் திறமையையும் பெற்றார். பல வித்துவான்கள் வசித்த மதுரைக்குத் தமது தமிழறிவைவிருத்திசெய்து கொள்ளும் பொருட்டு, இவர் சென்றார்.

அப்பொழுது மதுரையில்குலசேகரன்என்னும் பாண்டிய மன்னன் அரசுபுரிந்து வந்தான் அவன் புகழேந்திப் புலவரின் கல்வித்திறமையறிந்து அவரைத் தனது அரண்மனை வித்துவானாக நியமித்துக் கொண்டான். பாண்டியனுக்கு ஒரு மகள் இருந்தாள். அவளுக்குப் புகழேந்திப் புலவர் தமிழ் நூல்களைக் கற்றுக் கொடுத்து வந்தார். அவளும் தமிழில் பாடல்கள் இயற்றும் பழக்கம் பெற்றனள்.

அக் காலத்தில் விக்கிரம சோழன் என்னும் அரசன், திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள

உறையூரைத் தலை நகராகக் கொண்டு சோழ நாட்டை ஆண்டு வந்தான். அம் மன்னனிடம் ஒட்டக்கூத்தர் என்பவர் அரண்மனைப் புலவராக விளங்கினார். அவரைச் சோழ மன்னன் தனது மகன் குலோத்துங்கன் என்பவனுக்குப் பெண் பேசிவரப் பாண்டிய மன்னனிடம் அனுப்பினான்.

அங்குப் பாண்டியன் சபையில் ஒட்டக்கூத்தர் சோழ நாட்டின் சிறப்பையும், சோழ ராஜனுடைய பெருமையையும் புகழ்ந்து பாடினார். உடனே புகழேந்திப் புலவர் அதற்கு மாறாகப்பாண்டிய நாட்டையும், பாண்டியனையும் சிறப்பித்துப் பாடினார். அதுமுதல் ஒட்டக்கூத்தருக்குப் புகழேந்திப் புலவரிடம் பொறாமையும், பகைமையும் உண்டாயின.

பின்பு பாண்டியன் மகளுக்கும் குலோத்துங்கச் சோழனுக்கும் திருமணம் நிகழ்ந்தது. பாண்டியன் தன் மகளுக்குக் கொடுத்த அநேக சீதனங்களுடன் புகழேந்திப் புலவரையும் அனுப்பினான். ஒட்டக்கூத்தர், புகழேந்தியாரிடம்கொண்ட பொறாமையினால் அவரைத் துன்பப்படுத்தக் கருதினார். ஒரு நாள் அவர் சோழ ராஜனிடம், "அரசே! புகழேந்தியை நல்லவரென்று எண்ணவேண்டாம். நான் மதுரைக்குச் சென்றிருந்தபொழுது, பாண்டியன் முன்

னிலையில் தங்களைப் பலவாறு இழிவாகப் பேசி னார்" என்று தெரிவித்தார். அதைக்கேட்ட அரசனும் அவரது விருப்பப்படி புகழேந்தி யாரைச் சிறையிலடைத்தான்.

சிறைச்சாலையில் பலமாதங்கள் புகழேந்திப் புலவர் அடைபட்டிருந்தார். அப்போது அவர் அல்லியரசாணி மாலை, பவளக்கொடி மாலை, புரந்தரன் களவு மாலை முதலிய நூல்களைப் பாடினார். சிறைச்சாலையின் பக்கமாகத் தண் ணீர்க்குச் செல்லும் பெண்கள் இவர் பாட்டுக் களைக் கேட்டு மகிழ்ந்து, இவருக்கு வேண் டிய உணவும், தின்பண்டங்களும் கொடுத்து வந்தனர்.

புகழேந்திப் புலவருக்கு நேர்ந்த கஷ்டத் தைக் கேள்வியுற்ற ராணி மிகவும் வருந்தினாள். அதனால் அரசனுடன் பிணங்கிக்கொண்டு அவள், தனது அறையின் கதவை மூடித் தாழிட்டாள். ராணி பிணங்கிக் கொண்டிருப்பதை யறிந்த அரசன், அவளை மகிழ்விக்க ஒட்டக்கூத்தரை அழைத்துச் சில பாடல்கள் பாடுமாறு வேண்டினான். அவள் ஒட்டக்கூத்தர் பாடியதைக் கேட்டுக் கோபங் கொண்டு, "ஒட்டக்கூத்தன் பாட்டிற்கு இரட் டைத் தாழ்ப்பாள்" என்று இன்னொரு தாழையும் போட்டுக்கொண்டாள். உடனே

அரசன் புகழேந்திப் புலவரைச் சிறையிலிருந்து வரவழைத்து அவரையும் ஒரு கவி பாடச்செய்தான். ராணி அதைக் கேட்டதும் சந்தோஷமடைந்து உடனே கதவைத் திறந்தாள். அதுமுதல் அரசன் புகழேந்திப் புலவரை அன்புடன் ஆதரித்து வந்தான். அதன் பின்பு புகழேந்தியார் நளவெண்பா என்னும் நூலை இயற்றினர். இவர் எழுதியுள்ள நூல்களில் இது மிகவும் சிறந்தது.

சொல் விளக்கம்:—புலவர்=வித்வான். கவி=செய்யுள், பாட்டு. இயற்றினர்=செய்தார். சிறைச்சாலை=ஜெயில். தாழ்=தாழ்ப்பாள்.

கேள்விகள்:—

1. புகழேந்திப் புலவர் எங்குப் பிறந்தவர்?
2. எந்த அரசனிடத்தில் புலவராக இருந்தார்?
3. ஒட்டக்கூத்தர் மதுரைக்கு ஏன் சென்றார்?
4. ஒட்டக்கூத்தருக்கும் புகழேந்திப் புலவருக்கும் பகைமை ஏற்படக் காரணமென்ன?
5. புகழேந்திப் புலவர் ஏன் உறையூருக்கு வந்தார்?
6. அவர் சிறையிலடைபடக் காரணம் என்ன?
7. சிறையில் அவர் இயற்றிய நூல்கள் யாவை?
8. புகழேந்தியாரைச் சிறையிலிருந்து விடுவிக்க ராணி என்ன செய்தாள்?

பயிற்சி:—பின்வரும் சொற்களை யமைத்து வாக்கியங்கள் எழுதுக:—

(1) புலவர் (2) சீதனம் (3) கவி (4) திருமணம் (5) தாழிட்டுக்கொண்டு.

16. நெல்

நாம் பசி தீர உண்டு உயிர் வாழ்வதற்கான உணவுப் பொருள்களில் தானிய வகைகளே முதன்மையானவை. ஆதலால், ஆதிகாலம் முதல் நமது நாட்டினர் உழவே சிறந்ததெனக் கருதிப் பயிர்த்தொழில் செய்துவருகின்றனர். பயிரிடுந் தொழிலுக்கு விவசாயம் அல்லது வேளாண்மை என்று பெயர். வேளாண்மை செய்பவர்கள் வேளாளர்கள். உணவுக்காகும் தானியங்களிலெல்லாம் நெல்லே முதன்மையானது. நெல்லில் சிறுமணி, கார், குறுவை, சம்பா, சீரகச் சம்பா முதலிய பலவகைகள் உண்டு.

நெல் வயல்கள் நன்செய் எனப்படும். கோடைக் காலத்தில் வயல்களில் சாம்பர் எரு அடித்து, நிலத்தை உழுது புழுதியாக்கு வார்கள். நிலத்தை உழுவதற்கான கருவி ஏர் அல்லது கலப்பை எனப்படும். சாதாரணமாகக் கலப்பைகள் மரத்தினால் செய்யப்பட்டு, பூமியில் பதியும் பாகத்தில் கூர்மையான இரும்புக்கொழு அல்லது காறு சேர்க்கப்பட்டிருக்கும். இந்தக் காறு பூமியில் பதிந்து, நிலத்தைக் கீறி மண்ணைப் புரட்டும். இவ்வாறு மேல் மண்ணும், கீழ் மண்ணும் மாறி மாறிக் கலந்து நிலம் புழுதியாவதால், காற்றும்



தண்ணீரும் நிலத்துட் செல்லச் சாதகமாகும். அகல உழுவதை ஆழ உழு என்பது ஒரு பழமொழி. நிலத்தை ஆழமாக உழுவதற்குத் தற்காலத்தில் புதுமாதிரியான இரும்புக் கலப்பைகள் ஏற்பட்டுள்ளன. அவைகளை வாங்கி உபயோகிப்பது நலம்.

மழை பெய்து ஆறு குளங்களில் தண்ணீர் வந்ததும், வயலில் நீர் பாய்ச்சி, இலை தழைகளை உரமாக இட்டு, மறுபடியும் உழுது சேறாக்குவது வழக்கம். சேறாக்கிய பிறகு, பரம்புச் சட்டத்தினால் நிலத்தைச் சமப்படுத்த வேண்டும்.

இவ்வாறு நிலத்தைப் பண்படுத்திய

பிறகே நெல் விதைகளை விதைக்கவேண்டும். நன்றாய் விளைந்து முற்றிய நெல்மணிகளை விதைக்கென்று தனியாக முந்திய அறுவடைக் காலத்தில் எடுத்துக் கோட்டை கட்டி வைத்திருப்பார்கள். இக் கோட்டைகளைத் தண்ணீரில் ஊறவைத்து, முளைகண்டதும் அவ் விதைகளை நாற்றங்கால்களுக்குக் கொண்டுபோய்த் தெளிப்பார்கள். முளைகள் அழுகிப் போகாமலிருக்க, வயலிலுள்ள தண்ணீரை வடிய விடவேண்டும்.

முளைகள் பசுமையான சிறு நாற்றுக்களாக வளர்ந்துவரும்பொழுது, மறுபடியும் தண்ணீர் பாய்ச்சுவார்கள். நாற்றுக்கள் ஒரு அடி உயரம் வளர்ந்த பின் அவைகளைப் பிடுங்கி, பண்படுத்திய வேறு வயல்களில் தனித்தனியாகவும், வரிசையாகவும் சிறிது இடம் விட்டு நடுவது வழக்கம். இவ்வாறு நாற்றுவிட்டுப் பிடுங்கி நடுவதால் பயிர்கள் செழித்து வளரும்.

பயிர்கள் வளர்ந்து வரும்பொழுது காலந்தவறாமல் தண்ணீர் பாய்ச்சி, களை எடுத்து அவைகளைப் பராமரிக்க வேண்டும். ஆடு மாடுகள் மேயாமல் பயிரைப் பாதுகாப்பதும் அவசியமாகும். பயிர் வளர்ந்து, கதிர் விட்டு, பசுமை நிறம் மாறிய பின்பு நெல் மணிகள் பழுத்து அறுவடைக்குத் தகுதியாகும். அப்பொழுது

வயலிலுள்ள நீரை வடியவைத்துப் பயிரைத் தாளுடன் கருக்கு அரிவாளால் அறுப்பார்கள். அரிந்த தாள்களை அரி அரியாக வயலிலேயே காயவைப்பது வழக்கம்.

பின்பு உழவர்கள் அரிகளைச் சேர்த்துச் சுமை சுமையாகக் கட்டி அவைகளைக் களத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள். அங்கே அரிக்கற்றைகளைத் தரையின்மேல் ஓங்கி யடித்து நெல் வேறாகவும், வைக்கோல் வேறாகவும் பிரித்து, வைக்கோலைப் போர் போடுவார்கள். பூமியில் உதிர்ந்த நெல்லைக் குவித்து, கொஞ்சங் கொஞ்சமாக முறத்தில் அள்ளி அதைக் காற்றில் தூற்றுவார்கள். அப்பொழுது பதர்கள் காற்றில் பறந்து தூரத்தில் விழ, தானிய மணியாகிய நல்ல நெல் ஒரே இடத்தில் விழுந்துவிடும்.

சில நாட்களுக்குப் பிறகு போரிட்ட வைக்கோலைப் பரப்பி, கடாக்களையும், எருதுகளையும் கட்டி அதன்மேல் மிதிக்கச் செய்வார்கள். இதற்குப் பிணையடித்தல் என்று பெயர். இப்படி மிதிப்பதால் வைக்கோலில் ஒட்டிக் கொண்டிருந்த மீதி நெல்லும் உதிர்ந்து விடும். இந்த நெல்லையும் சேகரித்து எடுத்துக்கொள்வார்கள். இவ்வாறு அறுவடை செய்து சேகரித்த நெல்லை வீட்டிலுள்ள குதிரிலும்

களஞ்சியத்திலும் சேமித்து வைப்பார்கள். பிறகு வேண்டும்பொழுது நெல்லை எடுத்துக் குத்தி, அரிசியாக்கிச் சோறு சமைத்து இன்பமாகப் புசிப்பார்கள்.

உயிர்த் தொழிலாகிய பயிர்த் தொழிலை நமது முன்னோர்கள் மிக்க ஊக்கத்துடன் நடத்திச் சிறந்த நெல் விளைவு பெற்று வந்தார்கள். இக்காலத்திலோ, பலர் உழவுத்தொழிலை இழிவுத்தொழிலாக நினைத்து அலட்சியஞ் செய்து உத்தியோகங்களையே பெரிதாக நாடுகிறார்கள். இதனால் பயிர்வளம் குறைந்து செல்வமும் குன்றுகிறது; ஆதலால் வேளாண்மையை இகழாமல், அதிக ஊக்கங் காட்டிப் புதிதான விவசாய முறைகளையும், கருவிகளையும் கையாண்டு நிலவளத்தைப் பெருக்க, மாணவர்களே! நீங்கள் முயற்சிக்கவேண்டும்.

சொல் விளக்கம் :—உரம்=எரு. பராமரிக்கவேண்டும்=பாதுகாக்கவேண்டும். கருக்கு=கூர்மை. கையாண்டு=உபயோகித்து.

கேள்விகள் :—

1. பின்வரும் பதங்களை விளக்கிச் சொல்லுக :—
(1) வேளாண்மை (2) பிணையடித்தல் (3) புன்செய் (4) பரம்படித்தல் (5) நாற்றங்கால் (6) களை.

2. பயிர்த் தொழிலின் சிறப்பைப் பற்றி நான்கு வாக்கியங்கள் எழுது.

17. உயிர்களிடத்து அன்பே உயர்ந்த தவம்

(பாட்டு)

1. சிங்காரச் சோலையிலே—சிபியரசன்
சென்றிருக்கும் மாலையிலே
அங்கோர் புரு மடியினிலே—வந்து
அபயமென வீழ்ந்ததுவே.

2. அஞ்சி நடுநடுங்கிப்—பதறும்
அப்பறவை தனையெடுத்து
சஞ்சலப்படாதே யினி—உனக்குத்
தஞ்சம் அளிப்பேன்என் றுரைத்தான்.

3. அன்பாக வைத்திருக்க—அப்போது
அதைத் தொடர்ந்து வந்த வேடன்
என் புருவைக் கொடுத்தருளும்—இப்
எந்தலே என மொழிந்தான். [போது

4. அபயமென வந்ததை நான்—அன்போடே
ஆதரிப்பேன் போடா, வேடா!
உபயமாக இப்புருவை—நான்
உனக்களியேன் போடா, மூடா!

5. காலை முதலுணவு மில்லை—நான்
கடும் பசியினுற் களைத்தேன்
மாலையாயிற் றிரைதேட—இனி
வழியுமில்லை ஐயா! என்றுன்.

6. உண்ண நல்ல உணவு ஈவேன்—இன்னும்
உடுக்க நல்ல உடை தருவேன்
எண்ணம்போல வேறெதுவும்—உனக்கு
ஈந்திடுவேன் கேள் நீ என்றான்.

7. என் புறுவினெடை உமதூன்—எனக்கு
ஈந்தால் போதுமென அரசன்
தன்தொடையை யறுத்தறுத்து—ஒரு
தராசினிலே நிறுத்துப் பார்த்தான்.

8. சரியெடை வராததினால்—மன்னன்
தட்டிலேறித் தானுட்கார
பரிவுடனே ஈசன் வந்து—என்றன்
பரிசோதனை யென்றுரைத்தான்.

9. "தன்னுயிர்போல் மன்னுயிரை—என்றும்
தாங்கும் தயாநிதியே!
உன்னத சுவர்க்கம் தந்தேன்"—என
உரைத்துப் பரமன் மறைந்தான்.

சொல்விளக்கம்:—அபயம்=அடைக்கலம். தஞ்சம்=பாதுகாவல். அஞ்சி=பயந்து. பதறும்=பரிதவிக்கும். சஞ்சலப்படாதே=மனங் கலங்காதே. ஏந்தலே = அரசனே. மொழிந்தான்=உரைத்தான், சொன்னான். ஆதரிப்பேன்=காப்பாற்றுவேன். ஈந்திடுவேன் = கொடுப்பேன். ஊன்=மாமிசம். பரிவுடனே = அன்புடனே. மன்னுயிர் = நிலைபெற்ற உயிர். என்றும்=எப்பொழுதும். பரமன்=ஈசன், கடவுள்.

18. தொட்டதெல்லாம் பொன்

முன்னொரு காலத்தில் மைதாஸ் என்னும் மன்னன் ஒருவன் இருந்தான். அவன், தனக்கு நிகரான தனவந்தர் எவரும் இல்லை என்னும் படி அளவிறந்த செல்வம் படைத்திருந்தான். என்றாலும், அவன் அதை அற்பமாக மதித்து, இன்னும் பெருஞ்செல்வம் இல்லையே என்னும் ஏக்கத்துடன் தான் உண்ணவும் உடுக்கவுங் கூட வேண்டிய செலவு செய்யாமல், பரம லோபியாக வாழ்ந்து வந்தான். நாடோறும்

பொக்கிஷ அறைக்குட் சென்று, அங்குள்ள பணத்தை எண்ணிப் பார்ப்பதில் தன் ஆயுளைப் பெரும்பாலும் கழிப்பான்.

ஒரு நாள் இரவு இவன் தன் கஜானு அறைக்குட் சென்று ஜன்னல்களையும் கதவு களையும் இறுகத் தாழிட்டுக் கொண்டு வழக்கம் போல் பணத்தை எண்ண ஆரம்பித்தான். அப்பொழுது ஜோதிமயமான ஓர் உருவம் அவன் முன் தோன்றியது. அதைப் பார்த்த மைதாஸ் திடுக்கிட்டுப் பணப்பையைக் கையில் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, "நீ யார்?" என்று அச்சத்துடன் வினவினுன். அந்த உருவம், "மைதாஸ்! பயப்படாதே. உனது பணத்தைத் திருடிப்போக நான் வரவில்லை" என்று பதிலளித்தது. "கதவுகளும் ஜன்னல் களும் தாழிட்டிருக்க, நீ இங்கு எவ்வாறு வந்தாய்?" என்று மைதாஸ் மறுபடியும் கேட்டான்.

"தாழ்களும் பூட்டுக்களும் என்னைத் தடுக்க முடியாது. நான் ஒரு தேவதை. உனக்கு நல்ல அதிர்ஷ்டம் அளிக்க வந்திருக்கிறேன். உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்" என்றது. உடனே மைதாஸ் உள்ளம் பூரித்து, "நான் தொட்டதெல்லாம் பொன்னுக மாறவேண்டும்" என்று வரமளிக்க வேண்டினுன். "நாளைச் சூரியோதயம் முதல் உனது

இஷ்டப்படியே ஆகுக" என்று சொல்லி அத் தேவதை மறைந்தது. பின்பு மைதாஸ், மிகுந்த ஏக்கத்துடன் சூரியோதயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

பொழுது விடிந்ததும், தேவதை அளித்த வரத்தைப் பரீட்சித்து அறிய வேண்டித் தான் உட்கார்ந்திருந்த கட்டிலைத் தொட்டான். என்ன ஆச்சரியம்! அந்த மரக்கட்டில் அக் கணமே தங்கக் கட்டிலாக மாறிற்று. ஆனந்தத்துடன் குதித்துக் கொண்டு அங்கிருந்த நாற்காலியையும், கதவையும், சுவரையும் தொட்டான். அவை எல்லாம் பொன் மயமாக மாறின.

இவ்வாறு அரண்மனையிலுள்ள சகல பொருள்களையும் தங்கமாக மாற்றிய பிறகு, மிகுந்த குதூகலத்துடன் காலையுணவு அருந்தச் சென்றவன், தனக்குப் பலகாரங்களும் பானங்களும் வைத்திருந்த தட்டுக்களையும் கோப்பைகளையும் தொட்டான். அவைகளும் பொன்னாக மாறின. ஆகார பதார்த்தங்களை உண்பதற்காகத் தொட்ட மாத்திரத்தில், அவைகளும் தங்கக் கட்டிகளாக மாறின. உடனே அவன் திகிலடைந்து, அருந்துவதற்காகத் தண்ணீரைத் தொட்டான். தண்ணீரும் உருகிய தங்க நீராயிற்று. மைதாஸ் என்ன செய்வான் பாவம்! எல்லாம் தங்க மயமாக இருந்தும் அவற்றால் தனது பசியையும், தாகத்தையும்

போக்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் அவன் மிகவும் வருந்திச் சோர்ந்து இளைத் தான்.

எங்குப் பார்த்தாலும் சுவர்ணமயமாக இருப்பதைக் கண்டதும், அவனுக்கு, தான் விரும்பி வேண்டிய பொன் வெறுப்பாகத் தோன்றிற்று. "நான் என்ன செய்வேன்! பசியினாலும் தாகத்தினாலும் சாகிறேனே! இத் தனை செல்வம் இருந்தும் யாது பிரயோஜனம்! தொட்டதெல்லாம் பொன்னாக வேண்டும் என வேண்டிக்கொண்ட நான் முழுமூடன்" என்று தன்னைத்தானே நொந்துகொண்டான்.

அத்தருணத்தில், முன்பு வரமளித்த தேவதை மறுபடியும் தோன்றி, மைதாஸ் மன்னனைப் பார்த்துச் சிரித்து, "பேராசை யுள்ள மன்னனே! நீ விரும்பிய அளவு தங்கம் கிடைத்ததா? திருப்தி தானா?" என்று கேட்டது. மைதாஸ் அத்தெய்வத்தின் அடி பணிந்து, "தாங்கள் அளித்துள்ள வரத் தைத் தாங்களே எடுத்துக் கொள்ளுங்கள். நான் பசிப் பிணியால் உயிர்போகுந் தறுவாயி லிருக்கிறேன். இத்தனை தங்கத்தையும் எடுத்துக் கொண்டு எனக்கு ஒரு கவளம் ஆகாரம் அளித் தால் போதும்" என்று கெஞ்சி மன்றாடினான்.

தேவதை, "இப்பொழுதாவது நற்புத்தி வந்ததா? இனி உனக்குள்ள செல்வத்தை

நல்ல வழியிற் செலவழித்து, நீயும் இன்புற வேண்டும்" என்று கூறி, தானளித்த வரத்தை மாற்றி யருளி மறைந்தது. உடனே தங்கமாக மாறிய எல்லாப் பொருள்களும் மீண்டும் முன்போல் ஆயின. அது முதல் மைதாஸ் மன்னன் மன நிம்மதியுடன் சுகமாக வாழ்ந்து வந்தான்.

"போதுமென்ற மனமே பொன்செய்யும்
மருந்து."

சொல் விளக்கம்:—லோபி= செலவு செய்யாத பேராசையுள்ளவன். பொக்கிஷம்=பணம் வைக்குமிடம், கஜானு. ஜோதி=ஒளி. அச்சம்=பயம். அக்கணமே=அந்த நிமிஷமே. சுவர்ணம்=பொன். கவளம்=ஒரு பிடி உணவு. நிம்மதி=அமைதி, கவலையில்லாமை. அருந்த=உண்ண.

கேள்விகள்:—

1. மைதாஸ் எக்குணம் உள்ளவன்?
2. அவன் தேவதையிடம் வேண்டிய வரம் யாது?
3. தேவதை யளித்த வரத்தினுல் மைதாஸுக்கு ஏற்பட்ட கஷ்டம் யாது?
4. அதனுல் அவன் உணர்ந்த நீதி யென்ன?

19. பஞ்சாயத்துச் சபை

மகன்.—அப்பா, இன்று அதிகாலை முதல் நமது ஊரார் கூட்டங் கூட்டமாகச்செல்லுகிருர்களே ! எங்கே போகிருர்கள்?

தந்தை.—இவ்வூர்ப் பஞ்சாயத்துச் சபை அங்கத்தினர்களின் தேர்தல் உன் பள்ளிக்கூடத்தில் இன்று நடைபெறுகிறது. அதற்காகத்தான் அவர்கள் போகிருர்கள்.

மகன்.—ஓகோ ! அதனுல் தான் இன்று எங்களுக்கும் பள்ளிக்கூடம் இல்லை போலும்! சரி. பஞ்சாயத்துச் சபை என்ருல் என்ன?

தந்தை.—பஞ்சாயத்துச் சபையைப் பஞ்சாயத்து போர்டு என்றும் சொல்லுவார்கள். பஞ்சாயத்து என்பதற்கு ஐந்துபேர் கூடிய சபை என்று பொருள். என்ருலும் இந்தப் பஞ்சாயத்து போர்டில் எட்டு முதல் பதினுறு அங்கத்தினர்கள்வரை இருப்பார்கள். ஒரு ஊரைப் பல பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும் இரண்டொரு அங்கத்தினரை உரிமைச்சீட்டு இட்டுத் தேர்ந்தெடுப்பார்கள்.

மகன்.—இச் சபை எதற்காக?

தந்தை.—ஓர் ஊரின் பொதுக் காரியங்களைக் கிராமவாசிகளே கவனித்து நடத்தி, மேற்

பார்வை செய்ய அரசாங்கத்தார் அநேக பெரிய ஊர்களில் பஞ்சாயத்துச் சபைகளை ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

மகன்.—பஞ்சாயத்துச் சபையினால் ஏற்படும் நன்மைகள் யாவை?

தந்தை.—தெருக்களில் விளக்குப்போடுதல், வீதிகளையும் ஜலதாரைகளையும் சுத்தி செய்தல், குடிதண்ணீர் வசதியமைத்தல், பாதைகளை மராமத்து செய்தல், ஆரம்பப் பள்ளிக்கூடம் வைத்து நடத்தல் முதலிய பொது ஜன நன்மைகள் இச் சபையால் நடைபெறுகின்றன.

மகன்.—இப் பொதுக் காரியங்களுக்குப் பணம் வேண்டுமே. பஞ்சாயத்தார் தமது சொந்தச் செலவில் அவைகளைச் செய்வார்களா?

தந்தை.—சொந்தச் செலவில் செய்யமாட்டார்கள். வீட்டு வரி, கடை வரி, தொழில் வரி, கல்வி வரி, மற்றும் பல சில்லறை வரிகள் ஆகிய இவைகளை ஜனங்களிடமிருந்து வசூல் செய்தும், சர்க்காரது உதவித் தொகை பெற்றும் பொதுச் செலவுகளைச் செய்வார்கள்.

மகன்.—ஆனால் அவர்களுக்குச் சம்பளமாவது உண்டோ?

தந்தை.—கிடையாது. அவர்கள் கௌரவத்திற்காகப் பொதுஜன ஊழியஞ் செய்கிறார்கள்.

மகன்.—பஞ்சாயத்தார்கள் பொதுநலக் காரியங்களை எவ்வாறு நடத்தி வருகிறார்கள்?

தந்தை.—பஞ்சாயத்துச் சபைக்கென்று பிரத்தியேகமாக ஒரு கட்டடம் உண்டு. மாதம் ஒரு முறையாவது சபையார் ஒருங்கு கூடிப் பொதுநல சம்பந்தமான விஷயங்களை ஆலோசித்துத் தீர்மானஞ் செய்வார்கள். பஞ்சாயத்துப் போர்டு பிரசிடெண்டு எனப்படும் அச் சபைத்தலைவர் அத் தீர்மானங்களை நிறைவேற்றி வைப்பார். இச் சபையின் ஆதரவில் குமாஸ்தாக்கள், வரிவசூல் செய்பவர்கள், வேலைக்காரர்கள் முதலிய பலர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மகன்.—நான் போய் உரிமைச் சீட்டுக் கொடுக்கலாமா?

தந்தை.—கூடாது. வரி செலுத்துபவர்களில் 21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தான் அந்த உரிமை யுண்டு.

மகன்.—பெண்களுக்கும் அவ்வுரிமை உண்டோ?

தந்தை.—உண்டு. ஆனால் அவர்களும் 21 வயதுக்கு மேற்பட்டவர்களாயும், வரி செலுத்துபவர்களாயும் இருக்கவேண்டும்.

மகன்.—எவ்விதக் குணமுள்ளவர்களை இச் சபைகளுக்குப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கவேண்டும்?

தந்தை.—உண்மை, நாணயம், பொது நன்மைக்கு உழைக்கும் தன்மை முதலிய மேலான குணங்கள் உள்ளவர்களையே நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்களும் சுய நலங் கருதாமல் ஜனங்களின் நன்மைக்கேற்ற சீர்திருத்தங்களைத் தொடங்கி முடிக்கத் தைரியமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

மகன்.—அப்பா! நான் இன்று பஞ்சாயத்துச் சபைகளைப்பற்றிப் பல விஷயங்கள் தெரிந்து கொண்டேன். பெரியவனானதும் பொது நலத்திற்காக நானும் உழைப்பேன்.

சொல் விளக்கம்:—பிரத்தியேகமாக = தனியாக. உரிமைச் சீட்டு="வோட்டு."

கேள்விகள் :—

1. பஞ்சாயத்துச் சபையார் செய்யும் பொது நலக் காரியங்கள் எவை?
2. பஞ்சாயத்துச் சபைக்கு வேண்டிய பணம் எவ்விதங்களில் கிடைக்கிறது?
3. பஞ்சாயத்துச் சபை அங்கத்தினர் தேர்தல் எவ்விதம் நடத்தப்படுகிறது?
4. வோட்டுக் கொடுக்கும் உரிமை யாருக்கு உண்டு?
5. பஞ்சாயத்துச் சபைக்கு எவ்விதக் குணமுள்ளவர்களை நாம் தேர்ந்தெடுக்கவேண்டும்?

———

20. கிராமபோன்

சிறுவர்களே ! நம்மவர்களில் சிலர் இனிய குரலில் சங்கீதம் பாடுவார்கள். மற்றும் சிலர் நாகசுரம், ஆர்மோனியம், பிடில், வீணை, புல் லாங்குழல் முதலிய வாத்தியக் கருவிகளை நன் ருய் வாசிப்பார்கள். இவர்கள் அனைவரும் சங்கீத வித்துவான்கள். இவர்களுக்கு இசை நூற் புலவர்கள் என்றும் பெயர். இவர்களிடம் சங்கீதம் கேட்டால் மனதிற்கு மட்டற்ற மகிழ்ச்சி யுண்டாகும். அதன் பொருட்டு இவர் களை வரவழைப்பதாளுல் இவர்களுக்குப் பெருந் தொகை தரல் வேண்டும். அது அனைவருக்கும் எளிதில் முடியுமா ? மேலும் நாம் விரும்பும் காலத்தில் வர அவர்களுக்கு முடியாமலும் இருக்கும். ஆகையால் நமக்கு விருப்பமான நல்ல சங்கீதம் முதலியவற்றை எந்த நேரத் திலும் சொற்பச் செலவில் கேட்க வேண்டிளுல், கிராமபோன் பெட்டிகளே உதவுவனவாம்.

நம்மிடம் கிராமபோன் பெட்டி ஒன்றிருந் தால் நாம் எப்பொழுதும் நல்ல பாடல்களையும், பெரியோர்கள் செய்த பல பிரசங்கங்களையும் நமது வீட்டினுள்ளிருந்தே கேட்டு இன் புறலாம். சிறந்த பாடகர்களின் பாட்டுக்களை அவர்கள் இறந்த பிறகும் கேட்பதற்கு இவை கள் சாதகமாகின்றன.

படத்திலிருக்கும் கிராமபோன் பெட்டியைப் பாருங்கள்! இப்பெட்டிக்குள் ஓர் இயந்திரம் இருக்கின்றது. அது ஒரு கடிகார இயந்திரம் போன்றது.

பெட்டியின் விலாப்புறத்திலிருக்கும் கைப்பிடியைச் சுழற்றிச் சாவி கொடுக்கும்போது,

பெட்டிக்குள் உள்ள விசை முடுக்கப்படுகிறது. முடுக்கப்பட்ட இந்த விசை, பெட்டியின் மேலிருக்கும் வட்டமான தட்டைச் சுழலச் செய்யும். பெட்டியின் பக்கத்திலிருந்து நீண்டு நிற்கும் புனல்போன்ற ஒரு குழாயையும், அத்துடன் இணைக்கப்பட்டுள்ள சிறு கருவியையும் பாருங்கள். இப்பெரிய குழாயைப் "புனல்"

என்றும், சிறு கருவியை "ஒலிப் பெட்டி" என்றும் சொல்லுவார்கள். ஒலிப் பெட்டியின் நுனியில் ஊசிகளை வைத்து எடுக்கலாம். இப்பொழுது புனல் இல்லாத கிராமபோன் பெட்டிகளும் உண்டு.

பெட்டிக்கு மேலிருக்கும் தட்டில் ஒலித் தட்டுக்களை வைக்கவேண்டும். ஒலித் தட்டுக்கள் ஒருவித அரக்கினால் செய்யப்பட்டவை. அவற்றில் வட்டவளையமான பல கோடுகள் இருக்கும். இத் தட்டுக்களில் பலவித முண்டு. சில வாத்தியத் தட்டுக்களாய் இருக்கும்; சில வாய்ப்பாட்டுப் பாடும் தட்டுக்களாயிருக்கும்; சில வேடிக்கைத் தட்டுக்களாயிருக்கும்; சில பேச்சுத் தட்டுக்களாயிருக்கும்; சில நாடகக் கதைத் தட்டுக்களாயிருக்கும்.

பாட்டுத்தட்டு ஒன்றைப் பெட்டியின்மேல் உள்ள தகட்டின்மீது வைத்து இயந்திரத்திற்குச் சாவி கொடுக்கவேண்டும். பின்பு ஒலிப்பெட்டியின் நுனியில் கிராமபோன்ஊசியை வைத்து, பக்கத்திலுள்ள தடைக்கம்பியைத் தள்ளிவிட்டால் தட்டு சுழலத்தொடங்கும். உடனே ஊசியின் நுனியைத் தட்டின் முதற் கோட்டில் வைத்தால், அந்த நுனி கோடுகளில் பட்டு உரசும்போது தட்டின் கோடுகளிலுள்ள மேடு பள்ளங்களுக்குத் தக்கவாறு தொனி வித்தி

யாசப்படும் ; நமக்குப் புனல் வழியாகப் பாட்டுக் கேட்கும். நாம் எந்தத் தட்டை வைக்கிறோமோ அந்தப் பாட்டின் சப்தம் காதில் விழும்.

நமக்கு விருப்பமான கீதம் முதலியவற்றை வேண்டும் பொழுதெல்லாம் கேட்பதற்கு கிராமபோன் மிகவும் உபயோகமுள்ள கருவியல்லவா?

சொல் விளக்கம் :—இசை=சங்கீதம். நூல்=சாஸ்திரம். புலவர்கள்=வித்துவான்கள். இசைநூற் புலவர்கள்= சங்கீத வித்துவான்கள். மட்டற்ற = அளவில்லாத, மிகுந்த. தொகை=பணம். உதவுவன=உபயோகப்படுவன. இன்புறலாம்=சந்தோஷம் அடையலாம். விசை=பொறி. இணைக்கப்பட்டு=பொருத்தப்பட்டு. ஒலிப்பெட்டி=இதை ஆங்கிலத்தில் சௌண்டு பாக்ஸ் (Sound box) என்பார்கள். ஒலித்தட்டு= பிளேட்டு. கீதம்=பாட்டு.

கேள்விகள் :—

1. பாடத்தில் கூறப்பட்டுள்ள வாத்தியக் கருவிகளின் பெயர்களைச் சொல்.
2. கிராமபோன் இயந்திரத்திலுள்ள முக்கியமான பாகங்கள் எவை ?
3. ஒலித்தட்டுக்களால் எவ்வெவற்றைக் கேட்கலாம்?
4. கிராமபோன் பெட்டியை ஒலிக்கச் செய்ய யாது செய்யவேண்டும் ?

21. மௌன வாசிப்பு

குறிப்பு :—

இந்தப் பாடத்தை மௌனமாக வாசித்து, பின்வரும் சொற்களில் பொருத்தமானவற்றைக் கோடிட்ட இடங்களில் அமைக்கவும்.

ரயில்	உறையில்	தபால் தலையை
கடிதம்	பேனாவை	தபாற் பெட்டி
பையில்	விலாசம்	தபால்காரன்
மையில்	முத்திரை	தபாலாபீசுக்கு

நான் என்——எடுத்து——தொட்டு என் அண்ணனுக்கு ஒரு———எழுதப்போகிறேன். நான் அந்தக் கடிதத்தை ஒரு——போட்டு, அதை ஒட்டுவேன். பிறகு உறையின் மீது——எழுதிய இடத்திற்கு மேலே——ஒட்டுவேன் பின்பு அதைக் கொண்டுபோய்த்——யில் பத்திரமாய்ப் போடுவேன்.

தபால்காரன் பெட்டியைத் திறந்து அதை எடுத்துத்———க் கொண்டு போவான். அங்கே———அடித்து ஒரு———போட்டுக் கட்டுவான். பின்பு ஒருவன் பையை——வண்டியில் கொண்டுபோய்க் கொடுப்பான்.

இந்த ஊர்———எங்களுக்கு வரும் கடிதத்தை எங்கள் வீட்டில் கொண்டுவந்து கொடுப்பான்.

22. டிக் என்னும் சிறுவனும் அவனது பூனையும்

பல வருடங்களுக்கு முன் இங்கிலாந்து தேசத்தில் ஒரு சிற்றூரில், டிக் என்னும் சிறுவன் ஒருவன் இருந்தான். டிக் விட்டிங்டன் என்பது அவனது முழுப் பெயர். இளம் பிராயத்திலேயே தன் தாய் தந்தையர்களை யிழந்த அவன், அன்றாடம் கூலி வேலை செய்பவளாகிய தன் அத்தையின் வீட்டில் வளர்ந்து வந்தான்.

அந்த ஊர் வழியாகச் செல்லும் பல வழிப் போக்கர்கள், இங்கிலாந்தின் பிரதான பட்டணமாகிய லண்டன் மாநகரத்தைப்பற்றிப் பெருமையாகச் சொல்லுவது வழக்கம். அப்பட்டணத்திலுள்ள வீதிகளெல்லாம் பொன்மயமானவையென்றும், அங்குள்ளவர்கள் எல்லோரும் மாடமாளிகைகளில் வசிக்கும் பெருஞ் செல்வர்களென்றும் அவர்கள் கூறினர். அவற்றைக் கேள்வியுற்ற டிக், தானும் லண்டன் சென்று செல்வவானாகிச் சுகமாக வாழ அவாக்கொண்டான்.

கையில் பணமில்லாததால், போக்கு வண்டி ஒன்றில் ஏறிக்கொண்டு லண்டனுக்கு டிக் சென்றான். ஆனால் அந்த நகரத்தைப் பார்த்ததும், அது அவன் கேள்விப்பட்டதற்கு மாறாக

இருந்தது. வீதிகளெல்லாம் சாதாரணக் கற் சாலைகளாகவே யிருந்தன. சாப்பாட்டு விடுதிகள் பல காணப்பட்டாலும், அங்கு இலவச உண்டி கிடையாது. வீடுகளில் உட்காரத் திண்ணைகள் கூட இல்லை. கையில் காசில்லாத டிக் என்ன செய்வான் பாவம்! பகல் முழுவதும் தெருத் தெருவாய்த் திரிந்து கடைசியில் கூலி வேலை யாவது கிடைக்குமா என்று விசாரித்தான். ஏழைச் சிறுவனை யார் கவனிப்பவர்கள்? ஒரு வரும் அவனை ஏற்றுக்கொள்ளவில்லை. இரவு வந்ததும், பசியினாலும் களைப்பினாலும் வருந்திக் கொண்டிருந்த அவன், தங்க இடமும், உண்ண உணவும் கிடைக்காமல் வருந்தி, முடிவில் ஒரு மாளிகையின் வாயிற்படியில் வந்து படுத்துக் கொண்டான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் வெளியிற் சென்று திரும்பிய அந்த வீட்டின் தலைவன் வாயிற்படியில் கிடக்கும் உருவத்தைக் குனிந்து பார்த்தான். அது ஒரு சிறு பையன் என்பதை யறிந்து, அவனையெழுப்பி உள்ளே அழைத்துச் சென்றான். அவனுக்கு அன்ன பான மளித்து, பிறகு அவனது விருத்தாந்தத்தை விசாரித் தான். தான் ஓர் அநாதையென்றும், யாதேனும் கூலிவேலைசெய்து பிழைக்கும் பொருட்டு அங்கு வந்ததாகவும் டிக் கூறினான். அவனிடத்தில் இரக்கங் கொண்ட அந்தப் பிரபு, அவனைத்

தன் வீட்டிலேயே இருந்து தனது வேலைக்காரிக்கு உதவியாய்க் குற்றேவல் புரிந்துவர நியமித்தான்.

எஜமானனும், அவனுடைய செல்வப் புதல்வி லூஸி என்பவளும் இந்தச் சிறுவனிடத்தில் அன்பாக இருந்து வந்தனர். இதைக் கண்டு பொறாமை கொண்ட வேலைக்காரி, அவனைக் கொடூரமாக நடத்தி வந்தாள். மேலும் அவன் இருந்த சிற்றறையில் எலிகளின் தொந்தரவு அதிகமாகவு மிருந்தது. அதனால் அவனுக்கு இரவில் நல்ல தூக்கம் கிடையாது. அச் சிறுவன், லூஸியிடம் இதைப்பற்றித் தெரிவித்தான். அச் சிறுமி அவனிடம் நாலணா பெறுமான ஒரு நாணயத்தைக் கொடுத்து ஒரு பூனையை வாங்கி வளர்க்கச் சொன்னாள். டிக் அவ்வாறே செய்ததனால் எலிகளின் தொந்தரவு ஒழிந்தது.

லூஸியின் தந்தை ஒரு பேர்போன வியாபாரி. கப்பலில் வியாபாரப் பொருள்களை ஏற்றிக் கொண்டு அயல் நாடுகளுக்குச் சென்று அவைகளை விற்றும், அங்கிருந்து பல புதிய பொருள்களை வாங்கியும் திரும்புவது அவன் வழக்கம். அவ்வாறு ஒரு முறை கப்பல் பிரயாணஞ் செய்ய ஆயத்தமான அவன், தன் வீட்டிலிருந்த பலரையும் அவரவர்களுக்குச் சொந்தமான சாமான்களைக் கொடுக்கும்படியும், அவைகளைத்

தான் விற்று வந்து கிரயத்தைக் கொடுப்பதாக வும் கூறினான். அவர்களில் பலர் தங்களிட மிருந்த சாமான்களைக் கொடுக்க, டிக் மட்டும் சும்மாவிருந்தான். இதைக் கண்ணுற்ற லூஸி, அவனுடைய பூனைக்குட்டியை யெடுத்து வந்து அதை விற்று வருமாறு தன் தந்தையிடம் கொடுத்தாள். அவன் அதையும் ஏற்றுக் கொண்டு கப்பல் யாத்திரை சென்றான். பூனைக் குட்டியை விட்டுப் பிரிந்த டிக் மறுபடியும் எலி களின் தொந்தரைக்கு உள்ளானான். வேலைக் காரியின் இம்சையும் அதிகரித்தது.

வியாபாரியின் கப்பல் கடற் பிரயாணஞ் செய்கையில், ஒருநாள் பெரும்புயலால் திசை தவறிப் புதிய தீவு ஒன்றை யடைந்தது. இதை யறிந்த அத்தீவின் அரசன் கப்பலில் வந்தவர் களை வரவேற்று அவர்களுக்குப் பெரியதோர் விருந்தளித்தான். அவ் விருந்துக்காகப் பற்பல பதார்த்தங்களும், பலகாரங்களும் கொண்டு வந்து வைக்கப்பட்டன. அப்பொழுது பெரிய பெரிய எலிகள் கூட்டங் கூட்டமாக ஓடிவந்து, சிறிது மஞ்சாமல் அவ்வுணவுப் பொருள்களைத் தின்றுவிட்டன. இதைப் பார்த்துத் திகைத்த விருந்தினர் "இந்த எலிகளையெல்லாம் கொன்று ஒழிக்க முடியவில்லையா?" என்று மன்னனைக் கேட்டார்கள். அதற்கு அரசன், " இத்தீவில் எலிகளின் தொல்லை யதிகம். இவைகளை

விரட்டுவதற்கு ஏதாவதொரு உபாயம் செய்வீர்களாகில், உங்களுக்கு நிரம்பப் பொன்னும் பணமும் தருவேன்" என்ருன்.

வியாபாரி சிறிது நேரம் ஆலோசித்து, தன்னிடம் கப்பலிலிருந்த பூனையைக் கொண்டு வரச் செய்தான். மறு முறையும் உணவுப் பொருள்கள் தயாரித்து வைக்கப்பட்டன. அப்பொழுது பூனையைக் கொணர்ந்து விடவே, எலிகளெல்லாம் வளைக்குள் ஓடத்தொடங்கின. அவைகளிற் சிலவற்றைப் பூனை பிடித்துக் கிழித்துக் கொன்றுவிட்டது. இதைக் கண்ட மன்னனும் அத்தீவிலுள்ளோரும் மிகவும் அதிசயித்தனர். ஏனென்ருல், இதற்கு முன் அவர்கள் பூனையைப் பார்த்ததேயில்லை.

விருந்து இனிது முடிந்தது. மன்னனும் தனது வாக்குப்பிரகாரம் அவர்களுக்கு நிறையப் பொன்னும் பணமும் அளித்தான். பிறகு வியாபாரி தனது வியாபாரப் பொருள்களை விற்றுவிட்டு லண்டனுக்குத் திரும்பினுன்.

வியாபாரி தனது மாளிகை வந்து சேர்ந்ததும், டிக் என்னும் அந்த அநாதைச் சிறுவனையழைத்து, நடந்தவற்றைத் தெரிவித்து, கப்பலிற் கொணர்ந்த பொன்னையும், பணத்தையும் அவனிடம் அளித்தான். அவன் அவைகளைப் பெற்றுக்கொள்ள முதலில் மறுத்தான். அவனுடைய பூனையினுல் கிடைத்த லாபத்தை அவனே அடைய வேண்டுமென்று வற்

புறுத்ினதின் பேரில் டிக் சம்மதிக்கவே, அப்பணத்தைக் கொண்டு பெரியதொரு பங்களாவையும் விஸ்தாரமான நன்செய் புன்செய் நிலங்களையும் அப்பிரபு அவனுக்கு வாங்கிக் கொடுத்தான். பின்பு தனது ஒரே மகளாகிய லூஸியையும் டிக் விட்டிங்டனுக்கு விவாகம் செய்து கொடுக்க, அவர்களெல்லோரும் ஒரே குடும்பத்தினராக வாழ்ந்து வந்தனர். தனக்குத் தீமை செய்த வேலைக்காரிக்குக்கூட டிக் பல பொருள்கள் அளித்து உதவி புரிந்தான். காலக்கிரமத்தில் லண்டன் நகரத்துச் சபைத்தலைவனாக டிக் விட்டிங்டன் நியமனம் பெற்று விளங்கினான்.

சொல் விளக்கம்:— அன்றாடம் = ஒவ்வொரு நாளும். மாடமாளிகை = மாடங்களும், மாளிகைகளும். (மாளிகை = பெரிய வீடு). இலவசமாக = இனமாக, கிரயமில்லாமல். அன்னம் = சோறு. பானம் = குடிப்பதற்கான தண்ணீர் முதலியன. விருத்தாந்தத்தை = சரித்திரத்தை. அநாதை = தாய் தகப்பனில்லாதவன். குற்றேவல் = சிறு வேலைகள். புரிதல் = செய்தல். புதல்வி = மகள். ஆயத்தமாகி = தயாராகி. தொந்தரை = இம்சை. மாலுமி = கப்பல் ஓட்டுபவன். உபாயம் = தந்திரம். வாக்குப்பிரகாரம் = சொல்படி. அளித்தான் = கொடுத்தான். காலக்கிரமத்தில் = நாளடைவில். சிறு ஊர் = சிற்றூர். சிறு அறை = சிற்றறை.

கேள்விகள் :—

1. டிக் ஏன் லண்டனுக்குச் சென்றான் ?
2. லண்டனில் அவனுக்கு ஆதரவு அளித்தது யார்?
3. டிக் பூனையை ஏன் வாங்கினான் ?
4. பூனை மிகுந்த விலைக்கு விற்கப்பட்டது எவ்வாறு?
5. டிக் கடைசியில் என்ன உயர்ந்த பதவி யடைந்தான் ?

23. உலோகங்கள்

பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படும் கல், மண், நிலக்கரி, பொன், வெள்ளி, இரும்பு முதலியவை தாதுப் பொருள்களாம். இவைகள் வெட்டி எடுக்கப்படும் இடம் சுரங்கம் அல்லது கனி எனப்படும். இத் தாதுப் பொருள்கள் பளுவும், பளபளப்பும், ஒருவித நாதமும் உள்ளவை. இவைகளை அனலில் உருக்கித் தகடாகவும் அடிக்கலாம்; கம்பியாகவும் நீட்டலாம். ஆதலால் இவைகள் உலோகங்கள் எனப்படுகின்றன அவ்விதமில்லாத கல், நிலக்கரி, கந்தகம் முதலியவைகள் உலோகப் பொருள்களாகா.

பொன், வெள்ளி, இரும்பு, செம்பு, ஈயம் இவ்வைந்தும் பஞ்ச உலோகங்கள் எனப்படும். இவைகளையன்றித் தற்காலத்தில் சுமார் ஐம்பது வேறு உலோகங்களும் கண்டறியப்பட்டுள்ளன. துத்தநாகம், அலுமினியம், நிக்கல், பாதரசம் முதலியனவும் உலோகங்களே. பாதரசம் சாதாரணமாகத் திரவ ரூபமாக விருக்கும்.

இரண்டு பங்கு செம்பும், ஒரு பங்கு துத்தநாகமும் சேர்த்து உருக்கியது பித்தளையாகும். செம்பும், வெள்ளீயமும், சிறிது துத்தநாகமும் கலந்து உருக்கி வார்த்தது வெண்கலம். பித்தளையும் வெண்கலமும் தனி உலோகங்கள் அல்ல.

இவைகள் கலப்பு உலோகங்களாகும். ரூபாயும் சவரனும் கலப்பு உலோகங்களால் செய்யப் படுவனவே. ரூபாயில் 93 பங்கு வெள்ளியும் 7 பங்கு செம்பும் சேர்ந்திருக்கின்றன. சவரனில் 22 பங்கு தங்கமும் 2 பங்கு செம்பும் கலந் திருக்கின்றன.

சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுக்கப்படும் உலோகங்கள் தனித்த பொருளாகக் கிடைப்ப தில்லை. அவை மற்றப் பொருள்களோடு கலந்தேயிருக்கும். கலப்புள்ள உலோகக் கட்டி களை வெட்டியெடுத்துப் பெரிய உலைகளில் இட்டுக் காய்ச்சி, இதரப் பொருள்களையும் அசுததங்களையும் போக்கித் தனி உலோகத் தைப் பிரித்தெடுப்பார்கள். நம் நாட்டில் உலோ கப் பொருள்கள் அதிகமாகக் கிடைப்பதில்லை. பெரும்பாலும் வெளி நாடுகளிலிருந்தே அவை கள் வருகின்றன.

பொன்னும் வெள்ளியும் உயர்ந்த உலோ கங்கள். இவை பளபளப்பாயும், துருப்பிடி யாமலும், களிம்பு ஏறாமலும் இருப்பதால் நகை, பாத்திரம், சரிகை முதலியவைகள் செய்யப் பயன்படுகின்றன. இவை மற்ற உலோ கங்களைவிடப் பளுவுள்ளவை. இவற்றின் விலையும் அதிகம்.

செம்பு முதலிய தாழ்ந்த உலோகங்களால் செய்த பாத்திரங்களுக்கும் நகைகளுக்கும்

பொன்னால் முலாம் பூசினால், அவை பொன்னைப்போலவே ஒளி தரும். மின்சாரத்தின் உதவியால் பொன் முலாம் பூசுவார்கள் அதைப்போலவே வெள்ளி முலாம் பூசுவதுமுண்டு.

செம்பு அல்லது தாம்பிரமானது மங்கிய சிவப்பு நிறமுள்ள ஓர் உலோகம். பொன், வெள்ளி இவைகளைவிட எளிதில் அதிகமாக அகப்படுவதால், இது மிகவும் குறைந்த விலையுடையது. இதைத் தகடுகளாக்கித் தவலை, குடம், கொப்பறை முதலிய பாத்திரங்கள் செய்கிறார்கள். செம்பில் அதிக சீக்கிரம் களிம்பு ஏறும். இக்களிம்பு விஷத்தன்மை யுள்ளதாகையால், போஜன பதார்த்தங்கள் வைப்பதற்கு உபயோகிக்க வேண்டின், இப் பாத்திரங்களுக்கு வெள்ளீயம் பூசுவது அவசியமாகும்.

உலோகங்களில் மிகவும் உபயோகமானது இரும்பு. இதனால் சிறிய ஊசி முதல் பெரிய ரயில் எஞ்சின் வரை பலவித சாமான்கள் செய்யப்படுகின்றன. இரும்பு சீக்கிரம் துருப் பிடித்துக் கெடுமாகையால் இரும்புச் சாமான்களுக்கு எனாமல் அல்லது ஜப்பான் என்ற ஒரு விதக் கருப்பு வர்ண எண்ணெய் பூசுகிறார்கள். இரும்புத் தகடுகளை உருக்கிய வெள்ளீயத்தில் தோய்த்துத் தகரம் செய்யலாம். சாதாரண

இரும்பில் சிறிது கரி சேர்த்துக் காய்ச்சி எஃகு செய்கிருர்கள். இரும்பைவிட இது மிகவும் உறுதியானது.

வெள்ளியம், காரீயம் என்று ஈயத்தில் இரு வகையுண்டு. வெள்ளியம் நிறத்தில் மங்காது ; காரீயம் கறுத்துவிடும். காரீயத்திஞல் காகிதத்தின்மேல் கோடு கிழித்தால், பென்சில் கோடுபோலத் தெரியும் ; வெள்ளியத்திஞல் அவ்விதக் கோடு உண்டாகாது. வெள்ளியப் பாத்திரங்களில் புளிப்பான பதார்த்தங்கள் வைத்தால் கைத்துப்போவதில்லே ; காரீயப் பாத்திரங்களில் அவை கைத்துப் போகும். ஆதலால் வெள்ளியத்தைப் பாத்திரங்கள் செய்யவும், காரீயத்தை துப்பாக்கிக் குண்டுகளும், அச்சு எழுத்துக்களும் செய்யவும் உபயோகிக்கிருர்கள். இவ்விரு வித ஈயமும் அனலில் சீக்கிரம் உருகுமாதலால், தண்ணீரில்லாமல் அடுப்பில் இப்பாத்திரங்களே வைக்கக் கூடாது. இவைகள் தவறிக் கிழே விழுந்தால் சீக்கிரத்தில் நசுங்கும் ; இவ்விஷயத்திலும் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்

துத்தநாகத் தகடுகளேத் தண்ணீர் தூக்கும் வாளிகள், குடம், தோண்டி முதலியவை செய்யவும், கூரை போடவும் உபயோகிக்கிருர்கள்.

நிக்கல் உலோகத்தினுல் ஒரு அணு, இரண்டணு, நாலணு நாணயங்கள் செய்யப்படுகின்றன.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அலுமினியம் களிமண்ணிலிருந்து எடுக்கப்படுகிறது. அது இலேசாக இருப்பதாலும், விலை சகாயமாக இருப்பதாலும், அதனுல் செய்யும் பாத்திரங்களைப் பலரும் உபயோகிக்கிருர்கள்.

சொல் விளக்கம்:—பஞ்ச=ஐந்து. நாதம் = சப்தம். முலாம் =பூச்சு. எச்சரிக்கையாக=ஜாக்கிரதையாக. சகாயமாக=மலிவாக. களிம்பு=நீலநிறமான ஒருவித விஷப் பொருள். சவரன் =பவுன். அனல்=நெருப்பு. கைத்து= கசந்து.

கேள்விகள்:—

1. உலோகப் பொருள்களின் குணங்கள் யாவை?
2. பொன்னும் வெள்ளியும் ஏன் உயர்ந்த உலோகங்கள்?
3. பித்தளை, செப்புப் பாத்திரங்களுக்கு ஏன் ஈயம் பூச வேண்டும்?
4. காரீயத்திற்கும் வெள்ளீயத்திற்குமுள்ள வேற்றுமைகள் யாவை?
5. ஈயப் பாத்திரங்களை உபயோகிப்பதில் நாம் எவ்வாறு எச்சரிக்கையாக இருக்கவேண்டும்?
6. கலப்பு உலோகம் என்ருல் என்ன? வெண்கலத்திலும், ரூபாய் நாணயத்திலும் என்ன உலோகங்கள் கலந்திருக்கின்றன?

24. கடிதம்—II

சென்னை,
12—11—1935.

சுகம்!

அன்புடைய தம்பி மாணிக்கத்துக்கு அநேக ஆசீர்வாதம். அவ்விடத்திய நலத்தை அறிய மிகவும் ஆசை.

உனது கடிதம் கிடைத்தது. நீ நன்றாகப் படித்து வருவதை யறிந்து மகிழ்ச்சி யடைகிறேன். என்றாலும், நீ பின்பற்றவேண்டிய சில புத்திமதிகளை இக்கடிதத்தின் மூலமாக அறிவிக்க விரும்புகிறேன்.

இவ்வுலகத்தில் நீ முக்கியமாகப் பெற வேண்டிய செல்வம் வலிய உடலும், தைரிய மனமுமேயாம். பாடம் படிப்பதிலும், கணக்குப் போடுவதிலும் வகுப்பில் நீ முதல்வனாக இருப்பதுபோலவே, வேகமாக ஓடுவதிலும், நன்றாக நீந்துவதிலும், பந்தய விளையாட்டுக்களிலும் முதல்வனாக இருக்கப் பிரயாசைப்படு.

உனது பாடசாலையில் சாரணச் சிறுவர் படை இருக்கிறதல்லவா? இளஞ் சாரணர்களுக்கு ஓநாய்க்குட்டிகள் அல்லது குருளையர் என்று பெயர். அந்தக் குருளையர் படையில் நீ சேர்ந்து பழகு. ஓநாய்க்குட்டி இளம் வயது

முதல் தைரியமாகக் காட்டில் வேட்டையாடப் பழகிக்கொள்ளும். அதுபோலவே நீயும் எப்பொழுதும் தைரியமாகவும், சந்தோஷமாகவும் இருக்கப் பழக்கஞ் செய்துகொள். அநாவசியமாகப் பயப்படுபவன் ஓநாய்க்குட்டி யாகமாட்டான். பொய் சொல்லவும், திருடவும், பிற கெட்ட காரியங்கள் செய்யவும் நீ பயப்பட வேண்டும். எந்த நல்ல விஷயத்திற்கும் நீ பயப்படாமலிருந்தால், உன்னை வீரன் என்று சகலரும் மெச்சிக்கொள்வார்கள்.

வருகிற ஜனவரிப் பண்டிகை விடுமுறைக்கு நமது தாயாருடன் நீ இங்கு வந்து சேரவும். அப்பொழுது இந்நகரில் அநேக வேடிக்கைகளைக் காணலாம்.

இங்ஙனம்

உனது அன்புள்ள

அண்ணன்,

சிவக்கொழுந்து.

விலாசம் :—

சிரஞ்சீவி மாணிக்கம்,

4-வது வகுப்பு,

பச்சையப்பன் பாடசாலை,

சிதம்பரம்.

25. பேராசை பெரு நஷ்டம்

காட்சி I

இடம் :—இந்துபுரி கடைவீதியில் ஒரு கடை

காலம் :—காலை

நடிகர்கள் :—நந்தகோபால் என்னும் வியாபாரி—அவரது வேலைக்காரன் கோவிந்தன்—குடியானவன் முருகன்

நந்தகோபால் :—கோவிந்தா! நேற்றிரவு கடையிலிருந்து பணப்பையை வீட்டுக்குக் கொண்டுபோகும் பொழுது, வழியிலுள்ள குளக்கரையில் வைத்துவிட்டு, கை கால்களைக் கழுவுவதற்குத் தண்ணீரில் இறங்கினேன். பிறகு அதை எடுக்க மறந்து வீடு சென்றேன். சாப்பிட்ட பின், மனைவி வழக்கம்போல் பணப்பையைக் கேட்டாள். அப்பொழுதுதான் குளக்கரையில் அதை வைத்தது நினைவிற்கு வந்தது. உடனே ஓடிப் போய்ப் பார்த்தேன். பணப்பை அங்குக் காணப்படவில்லை. அதனால் இரவு முழுதும் எனக்கு உறக்கமேயில்லை. அது எவர் கையிலாவது அகப்பட்டிருக்க வேண்டும். அப் பையைக் கண்டெடுத்தவர் திருப்பிக் கொடுத்தால், அதிலுள்ள தொகையிற் பாதியை அவர்களுக்கு இனம்

கொடுப்பதாகத் தெருவில் பலருக்கும் தெருவி. இப்பொழுதே போ.

கோவிந்தன் :—அப்படியே செய்கிறேன், ஐயா !

(வெளியில் செல்லுகிறான்)

முருகன் :—(சிறிது நேரத்திற்குப் பிறகு நந்தகோபாலிடம் வந்து) ஐயா, நேற்றிரவு கழனியிலிருந்து திரும்பும்பொழுது குளக்கரையில் நான் கண்டெடுத்த பணப்பை இதோ இருக்கிறது. இது தங்களுடையது தானா ?

நந்தகோபால் :—ஆம், இது என்னுடையதே !

முருகன் :—அப்படியானால் இதை எடுத்துக் கொண்டு தங்கள் வேலைக்காரன் தெரிவித்தபிரகாரம், பாதித்தொகையை எனக்கு இனாம் அளிக்கவேண்டுகிறேன்.

நந்தகோபால் :—ஓகோ ! என் பணத்தை என்னிடம் சேர்ப்பிக்க இனாம் கொடுக்க வேண்டுமா ? நன்றாயிருக்கிறது !

முருகன் :—கோவிந்தன் மூலம் தாங்கள் தெரிவித்தபடி பாதித்தொகையைக் கொடுப்பதுதான் நியாயம்.

ந—கோ :—என்னிடம் நியாயம் பேசுகிறாயா ? நீ என் பையைத் திருடிச் சென்றதாகக் குற்றஞ்சாட்டி உன்மேல் வழக்குத் தொட

ராமல் விடுவதே உனக்குப் பெரிய இனு மல்லவா? நிற்காதே ஓடிவிடு.

முருகன்:—தனவந்தராகிய நீங்கள் ஓர் ஏழைக் குடியானவனை இவ்விதம் அவமதித்து, ஏமாற்றுதல் தகுமா? (கோவிந்தன் வருகிறுன்)

ந-கோ:—கோவிந்தா, இவனை வெளியே துரத்து.

முருகன்:—(தனக்குள்) இவரிடம் அதிகம் பேசுவதில் பயனில்லை. பேராசை பிடித்து என் மேல் திருட்டுக் குற்றம் சாட்டுவதாகப் பயமுறுத்துகிறுர். இவ்வூர் நீதிபதியிடம் சென்று ஒரு வக்கீல் மூலமாக எனது வழக்கை முறையிட்டுக் கொள்ளுகிறேன்.

(வருத்தத்துடன் போகிறுன்)

காட்சி II

இடம்:—நந்தகோபால் வீடு

காலம்:—இரவு

நடிகர்கள்:—நந்தகோபால்; அவர் மனைவி கமலா தேவி.

ந-கோ:—(பணப்பையைத் தன் மனைவியிடம் கொடுத்துவிட்டு) நேற்றிரவு மறந்துபோன பணப்பையை எடுத்துக் கொடுப்பவருக்குப் பாதித் தொகை இனும் கொடுப்பதாகத் தெரிவித்திருந்தேன். குடியானவன் முருகனிடம் அது அகப்பட்டதாம். இன்றுகாலை அதை என்னிடம் கொடுத்துவிட்டு இனும்

தொகையைக் கேட்டான். நான் அவனைப் பயமுறுத்தி ஒரு பைசா கூடக் கொடுக்காமல் விரட்டிவிட்டேன்.

கமலா தேவி :—பணப்பை கிடைத்தது சந்தோஷந்தான். ஆனால் உண்மையுள்ள அவ் வெளிய முருகனை ஏமாற்றியது சரியல்ல. அவன் அந்தப் பையைக் கொடாமல், அதிலிருந்த ரூபாய் ஐந்நூறையும் பிறருக்குத் தெரியாமலே வைத்துக்கொண்டிருந்தால் நாம் என்ன செய்யமுடியும்? பாவம்! அவனுடைய மேன்மையான குணத்தை மெச்சி இனும் கொடுப்பதுதான் நியாயம்.

ந-கோ :—பணத்தைச் சம்பாதித்தவனுக்கல்லவோ தெரியும் அதன் அருமை!

காட்சி III

இடம் :—நீதி மன்றம்

காலம் :—பகல்

நடிகர்கள் :—நீதிபதி, வக்கீல்கள், முருகன் (வாதி), நந்தகோபால் (பிரதிவாதி), சேவகர்கள்.

வாதி வக்கீல். —(நீதிபதியைப் பார்த்து) கனம் தங்கிய பிரபுவே! எனது கட்சிக்காரன் முருகன் கொடுத்துள்ள வழக்கை இன்று விசாரிக்க வேண்டுகிறேன்.

நீதிபதி :—உபய வாதிகள் ஆஜர்தானா?

வாதி வக்கீல் :—ஆம், பிரபுவே. ஆஜர்தான்.

நீதிபதி:—பிரதிவாதிக்கு வக்கீல் யார்?

பிரதிவாதி வக்கீல்:—பிரதிவாதி நந்தகோபாலுக்காக நான் வகாலத்துப் பெற்றிருக்கிறேன்.

நீதிபதி:—(சேவகனைப் பார்த்து) வாதி பிரதிவாதிகளைக் கூப்பிடு.

சேவகன்:—முருகன்! முருகன்!! முருகன்!!! நந்தகோபால்! நந்தகோபால்!! நந்தகோபால்!!! இருவரும் வருகிறார்கள்)

(முதலில் சாட்சிக் கூண்டில் முருகன் ஏறிப் பிரமாணஞ் செய்கிறான்)

நீதிபதி:—(முருகனைப் பார்த்து) உனது வழக்கு யாது?

முருகன்:—மாலையில் இருட்டிய பிறகு, வயலிலிருந்து வீட்டுக்கு வரும்வழியில் குளத்தில் குளிக்கச் சென்றேன். கரையேறி வருகையில், ஒரு பணப்பை காலில் இடறியது. காலையில் விசாரித்து அதன் சொந்தக்காரரிடம் சேர்ப்பிக்க எண்ணி, அதை என் வீட்டுக்கு எடுத்துச் சென்றேன். பிரதிவாதியின் வேலைக்காரன் கோவிந்தன் மறுநாட் காலை தெருவில் வந்து, தனது எஜமானன் தன் பணப்பையைக் குளக்கரையில் வைத்து மறந்து வந்து விட்டதாயும், அதை எடுத்தவர் கொடுத்தால், பாதித் தொகை இனாம் கொடுப்பதாயும் தெரிவித்தான். உடனே

நான் பையை எடுத்துக்கொண்டு பிரதிவாதியிடம் போய்க் கொடுத்துவிட்டு, இனும் தொகையை வேண்டினேன். அதை அவர் கொடுக்க மறுத்து விட்டார். அவரது வார்த்தைப்படி பாதித் தொகை எனக்குக் கிடைக்குமாறு கோர்ட்டாரவர்கள் தீர்ப்புச் செய்யப்பிரார்த்திக்கிறேன். (முருகன் கூண்டை விட்டு இறங்குகிருன். நந்தகோபால் கூண்டில் ஏறுகிருன்)

நீதிபதி:—(பிரதிவாதியைப் பார்த்து) உமது பதில் வாக்குமூலம் என்ன ?

நந்தகோபால்:—நான் குளக்கரையில் பணப் பையை வைத்து மறந்தது மெய்யே. பாதித் தொகை இனும் தருவதாகச் சொன்னதும் உண்மையே. அந்தப் பணப்பை இதோ இருக்கிறது. (பணத்துடன் அதை மேஜையின் மேல் வைக்கிருன்)

நீதிபதி :—(வாதி வக்கீலைப் பார்த்து) நீர் குறுக்கு விசாரணை செய்யலாம்.

வாதி வக்கீல்:—(பிரதிவாதியைப் பார்த்து) அப்படியாளுல் நீர் ஏன் இனும் தொகையைக் கொடுக்க மறுக்கிறீர் ?

நந்தகோபால் :—அந்தப் பையில் ஆயிரம் ரூபாய் வைத்திருந்தேன். இப்பொழுது அதில் ஐந்நூறு ரூபாய்தான் இருக்கிறது. பாதித்

தொகையை அவன் எடுத்துக்கொண்டிருப்பான். ஆதலால் இனும் கொடுக்கத்தேவையில்லை.



வாதி வக்கீல் :—(பிரதிவாதியைப் பார்த்து) பையில் பணத்தை ரூபாய்களாக வைத்திருந்தீரா? அல்லது நோட்டுக்களாக வைத்திருந்தீரா ?

நந்தகோபால் :— ஆயிரம் ரூபாயும் முழு ரூபாய்களாகவே இருந்தன. நோட்டுக்கள் இல்லை.

வாதி வக்கீல் :—(நீதிபதியைப் பார்த்து) பிரபுவே ! பிரதிவாதி சொல்வது நம்பத்தக்கதன்று. வாதி உண்மையுள்ள ஏழைக் குடியானவன். அப்படி அவன் பிரதிவாதியை ஏமாற்றுவதானல், பையிலுள்ள முழுத் தொகையை

யுமே தனக்கு வைத்துக்கொண்டு வெளியில் பிறருக்குத் தெரிவிக்காமல் இருந்திருப்பானே. ஆதலால் வாதிக்கு நியாயம் கிடைக்க வேண்டுகிறேன்.

நீதிபதி:—(பிரதிவாதி வக்கீலைப் பார்த்து) நீர் என்ன சொல்லுகிறீர்?

பிரதிவாதி வக்கீல்:—பிரதிவாதி நந்தகோபால் இந்த ஊரில் ஓர் பெரிய வியாபாரி. அவர் சொன்ன சொல் தவறமாட்டார். வாதியே பாதித் தொகையை எடுத்துக் கொண்டுவிட்டபடியால், பிரதிவாதி இனும் தொகை கொடுக்கக் கடமைப்பட்டவரல்லர். ஆகையால் இந்த வழக்கைத் தள்ளுபடி செய்ய நீதிபதியை வேண்டுகிறேன்.

நீதிபதி:—பிரதிவாதி இந்தப் பையில் ஆயிரம் ரூபாய் இருந்ததாகச் சொல்லுகிறார். இப்பொழுது இதில் ஐந்நூறு ரூபாய் இருக்கிறது. இந்தப் பை இன்னும் எவ்வளவு ரூபாய் கொள்ளும் என்று ரூபாயை எண்ணிப் போட்டுப் பார்ப்போம். (ரூபாயை எண்ணிப் போடுகிறார். ரூபாய் 200 தான் அதிகம் கொண்டது.) இந்தப் பையில் ரூபாய் எழுநூறுதான் அடங்கும். ஆதலால் இதே பையில் ஆயிரம் ரூபாய் வைத்திருந்ததாகச் சொல்வது முற்றிலும்பொய். இதிலிருந்து குடியானவன் உண்மையுள்ளவனென்

பதும், இந்த வியாபாரி பேராசையுள்ளவ ரென்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகிறது. (தீர்ப்புச் சொல்லுகிறார்) (பிரதிவாதியைப் பார்த்து)

நீர் சொல்லுகிற ஆயிரம் ரூபாய் வைத்திருந்த பை இது அன்று. ஏனெனில் இதில் ரூ. 700 தான் அடங்குகிறது. ஆதலால் இந்த ஐந்நூறு ரூபாய்ப் பை உமக்குச் சொந்தமன்று. உமது ஆயிரரூபாய்ப் பை அகப்பட்டால் அது உமக்கு அளிக்கப்படும்.

(வாதியைப் பார்த்து) இந்தப் பையைப் பணத்துடன் நீயே எடுத்துக்கொள்.

(எல்லோரும் போகிறார்கள்)

"பேராசை பெரு நஷ்டம்."

சொல் விளக்கம்:—கழனி = வயல். தனவந்தர் = பணக்காரர். முறையிட்டுக்கொள்ளுகிறேன் = குறையைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மேன்மையான = மேலான. வகாலத்து = கட்சிக்காரருக்காக வாதிக்க அவரிடமிருந்து வக்கீல்கள் பெறும் அதிகாரம். விளம்பரஞ் செய்தல் = எல்லாரும் அறியும்படி தெரிவித்தல். வாதி = வழக்குத் தொடுப்பவன். பிரதிவாதி = வாதிக்கு எதிரி. கடமைப் பட்டவரல்லர் = பாத்தியப்பட்டவரல்லர். நீதி மன்றம் = நியாயஸ்தலம் (கோர்ட்டு). நீதிபதி = நியாய விசாரணை செய்பவர். பேராசை = அதிக ஆசை.

அதிவீரராம பாண்டியர் இயற்றிய

வெற்றி வேற்கை

என்னும்

நறுந்தொகை

1. எழுத்தறி வித்தவன் இறைவ னாகும்.
2. கல்விக் கழகு கசடற மொழிதல்.
3. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
4. மன்னர்க் கழகு செங்கோல் முறைமை.
5. வணிகர்க் கழகு வளர்பொருள் ஈட்டல்.
6. உழவர்க் கழகு உழுதூண் விரும்பல்.
7. மந்திரிக் கழகு வரும்பொருள் உரைத்தல்.
8. தந்திரிக் கழகு தறுகண் ஆண்மை.
9. உண்டிக் கழகு விருந்தோடு உண்டல்.
10. அறிஞர்க் கழகு கற்றுணர்ந்து அடங்கல்.
11. வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை.
12. தேம்படு பனையின் திரள்பழத்தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.
13. தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க்கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவியாட் பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.
14. பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்.

15. சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்.

16. பெற்ருே ரெல்லாம் பிள்ளைகள் அல்லர்.

17. உற்ருே ரெல்லாம் உறவினர் அல்லர்.

18. அடினும் ஆவின்பால் தன் சுவை குன்ருது.

19. சுடினுஞ்செம்பொன் தன்ஞெளிகெடாது.

20. அரைக்கினுஞ் சந்தனம் தன்மணம் அருது.

21. புகைக்கினுங் காரகில் பொல்லாங்கு கமழாது.

22. கலக்கினுந் தண்கடல் சேருகாதே.

23. ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்கவேர்வீழ்க் கும்மே.

24. நூருண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள்ளாதே.

25. பெருமையுஞ் சிறுமையுந் தான் தர வருமே.

26. சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே.

27. சிறியோர் பெரும்பிழை செய்தன ராயிற்
பெரியோ ரப்பிழை பொருத்தலு மரிதே.

28. கற்கை நன்றே கற்கை நன்றே,
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

29. கல்லா வொருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே.

30. நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன்
கற்றில னாயிற் கீழிருப் பவனே.
31. எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும்.
அக்குடியிற் கற்றோரை வருக வென்பர்.
32. குடை நிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்
ணுவர்.
33. சிறப்புஞ் செல்வமும் பெருமையு முடை
யோர்
அறக்கூழ்ச் சாலை படையினும் அடைவர்.
34. அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்
அரசோ டிருந்தர சாளினும் ஆளுவர்.
35. குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே யழியினும் அழிவர்.
36. எழுநிலை மாடங் கால்சாய்ந் துக்குக்
கழுதை மேய் பாழாயினு மாகும்.
37. பெற்றமுங் கழுதையு மேய்ந்த வப்பாழ்
பொற்றொடி மகளிரு மைந்தருஞ்
செறிந்து
நெற்பொலி நெடுநக ராயினு மாகும்.
38. தறுகண் யானை தான் பெரிதாயினும்
சிறுகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே.
39. துணையோ டல்லது நெடுவழி போகேல்.
40. வழியே யேகுக வழியே மீளுக.
41. வாழிய நலனே ! வாழிய நலனே !

தனிப் பாடல்கள்

1. நாளை, நாளை

நாளை நாளை யென்னாதே
நாளை வீணில் போக்காதே
நாளைச் செய்யும் காரியத்தை
நாளை இன்றே முடிப்பாயே.

2. செருப்பு

கல்லும் உறுத்தாது ; காலில் முள் தையாது ;
எல்லை மார்த்தாண்டன் சூடேறாது ; தொல்லை
[வரும்
மாலை இருளில் வழி நடக்கக்கூசாது,
காலில் செருப்பிருந்தக் கால்.

3. தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க தமிழ் மொழி, வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே.
எங்கள் தமிழ் மொழி, எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே.
வானமளந்த அனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே !
ஈனம் தவிர்த்து உயர் மேன்மையளித்திடும்
இன் தமிழ் வாழியவே.

4. மெய், பொய்

மெய்யதைச் சொல்வராகில்
விளங்கிடும் மேலும் நன்மை;
வையகம் அவரைக் கொள்ளும்;
மனிதரில் தேவராவர்
பொய்யதைச் சொல்வராகில்
போசனம் அற்பமாகும்;
நொய்யவர் இவர்கள் என்று
நோக்கிடார் அறிவுள்ளோரே.

5. கல்வி

வெள்ளத்தே போகாது; வெந்தணலில்
வேகாது; வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது; கொடுத்தாலும்
நிறைவன்றிக் குறைவுறாது;
கள்ளர்க்கு மிக அரிது; காவலோ மிக எளிது;
கல்வியென்னும்
உள்ளத்தே பொருளிருக்க ஊரெல்லாம்
பொருள்தேடி உழல்வதென்னே!

Printed at the Royal Printing Works, Mount Road, Madras.